அன்பளிப்பு விலை 50/=


ISSN-2613-828X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 02 | வைகாசி 2019 | களரி: 04

## ஞாயிறு மீண்டும் வெள்ளியானதோ? நம்பிக்கையை இழக்காதீர்



நீ உருவாகி பிறரை உருவாக்கு

# மனம் கொண்ட மதம்

## மதம் கொண்டால்...

சமயங்கள் தனது பக்தி முயற்சிகளை பிற சமயங்கள் பற்றிய தெளிவின்மையைக் குரோத மனப்பாங்குடன் மதவெறித்தனத்தை ஊட்டுவதால் தான் மதங்களிடையே தமது மதமே முதன்மையானது என்ற மமதைத் சிறுவர்கள், இளையோர் மனங்களில் நச்சு விதைகளாக பரவி வருவதும் மத வெறியாக மாறுவதும் இன்றைய காலத்தின் மத வன்முறைக்குக் காரணமாகின்றது.

மனம் கொண்ட மதம் மதம் கொண்டதால் மனித மகத்துவம் இழந்து விடுகின்றது. இவை ஒரு மதத்தில் தான் என சுட்டுவதை ஏற்க முடியாது. சகல மதங்களிலும் தீவிரவாத உணர்வுகளைச் சுமந்து மத வெறியர்களாக மாற மதஅரசியல், சமூகவழிகாட்டிகள் சுய விமர்சனம் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எமது மதமே உயர்ந்தது, முதன்மையானது என்று பெருமைப்படுவதில் சாதனை வீரர்களை மத வெறியராக மாற்றுவதை உணர மறுப்பதே சமயங்களாலும், அரசாலும் வழிகாட்டப்பட்டதன் அறுவடைகளே இன்று வன்முறையாகவும், குரோத மனப்பான்மைகளையும் சிறுவயதில் விதைத்து வளர்த்ததன் அறுவடைகள் பல இடங்களில், பல நிலைகளில், பல மதங்களில் நடந்தேறி வருவதை தடுப்பதை எப்படி யாரால் முன்னெடுப்பது என்பதை சகல மதத் தலைமைகளும் திட்டமிட்டு செயல்படும் நேரமே இது.

கட்டிடங்களை விட மனித மனங்களைக் கட்டியெழுப்புவது தான் இன்று காலத்தின் தேவையாகும். கடமைக்காக, நேரசூசிக்காக, பணவருவாய்க்காக, வேறுதொழில்களைச் செய்யலாம், ஆன்மீக வழிகாட்டலை வியாபாரமாக்கி விடாது மதவிழுமியங்களை மனித மாண்புள்ளதாக மதிக்கும் பண்பால் உயர்த்த முன் வாருங்கள்.

# மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும்

ஈஸ்டர் தினத்தில் 250ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். சுமார் 500ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். மேற்படி அசம்பாவித சம்பவங்களால் இலங்கையில் வாழும் சகல மக்களும் பயத்திற்கும், பீதிக்கும் ஆட்பட்டுள்ளனர்.

பயங்கரவாதிகள் ஒரு புறமும், ஊடகங்கள் மறுபுறமுமாக தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வரும் நிலையில் அரசியல் தான் யாவற்றிற்கும் அடித்தளமாக இருக்கின்றது.



பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளமையும், அத்தோடு ஈஸ்டர் ஞாயிறு தினத்தில் நடந்த பாரிய

**ஓர் இனத்தை இன்னொரு இனம் அடக்கி ஆளவே முடியாது, மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.**

**- கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை -**



தாக்குதல்கள் நடத்தியவர்கள் முஸ்லிம்கள் என்றோ, இஸ்லாமியர்கள் என்றோ நாம் கருதவில்லை. நாம் முஸ்லிம் சகோதரர்களைக் குறை கூற முடியாது, குற்றம் சாட்ட முடியாது. அவர்கள் தவறிழைக்கவில்லை. நாம் மோதல்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. முஸ்லிம்களுக்கு எதிரான போராட்டத்திற்கு கிறிஸ்தவர்கள் வரவே மாட்டார்கள். மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பம்.

ஓர் இனத்தை இன்னொரு இனம் அடக்கி ஆளவே முடியாது இவ்வாறு கொழும்புப் அசம்பாவிதங்களின் பின்னர் அமைதிக்காக ஆக்கப் பணியாற்றும் ஆண்டகையை வாழ்த்தி வணங்குவதுடன் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளோம் என இலங்கை பல்சமயக் கருத்தாடல் நிலையம் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசியல் நடவடிக்கைகள் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்கள் மட்டில் திருப்தியடையவில்லை என்று கூறியதும் அரசால் வழங்கப்பட்ட குண்டு துளைக்காத வாகனங்களை உதாசீனம் செய்தமையும் கர்தினால் அவர்களின் துணிச்சலை எடுத்துக் காட்டுகின்றது.

# உங்களால் முயன்றால் முடியும்

வடக்குக்கிழக்கு எங்கும் பயங்கரவாதிகளால் உயிரிழந்த, காயப்பட்ட உறவுகளுக்காக பிரார்த்தனைகளும், அஞ்சலிகளும் எதிர்கால மத நல்லுறவைால் ஆற்றுப்படுத்த மேற் கொள்ள வேண்டிய வழிகளை மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், நாட்டு மக்கள் ஒன்று கூடி மனம் விட்டு, உறவாடி, உரையாடி பய உணர்வைக் களைவதற்காக முயலும் மனிதாபிமான நிகழ்வுகள் தொடர்கின்றது. சிறுவர்கள், இளையோர்கள் மட்டில் சிந்தனைகள் சிதறடிக்காமல் நல் நெறியின் ஆன்மீக வழிகளால் தூண்டி ஆற்றல்கள், திறன்களில் நாட்டத்தைத் தூண்டக்கூடிய குழு முயற்சிகளை ஏற்படுத்த முன்வருவோரே இன்றைய சமூக வழிகாட்டிகளாக முடியும். இத்தருணங் களை திசைதிருப்பி பகைமைகளைத் தூண்டி பிரிவினைகளை வளர்க்க முனைவோரும் எமது சூழலில் மறைவாக செயல்படும் பயங்கரவாதமே என்பதனை விழிப்புடன் செயல்படுவதில் சிறுசிறு குழும செயற்பாடுகளால் அமைதியையும், நல்லுறவையும் மலர வைப்பதில் முன்னிற்கும் பண்பாளராக தனிமையாக மட்டுமல்ல குழுக்களாக செயல்களால் முன்மாதிரியான தலைவர் களே முன் வாருங்கள்.

# தீவிரவாதத் தாக்குதல்களினால் நாட்டில் அச்சமும், பயமும், சந்தேகமும் நிலவுகின்றது

**இலங்கைப் பல்சமயக் கருத்தாடல் நிலையம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு**

இலங்கையில் உயிர்த்த ஞாயிறுதினத்தில் தேவாலயங்களிலும், ஹோட்டல்களிலும் தொடர் குண்டுத்தாக்குதல்களில் உயிரிழந்த 261 பொது மக்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, படுகாயமடைந்த 500ற்கும் அதிகமான உள்ளங்களின் காயங்கள் சுகம் பெற எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம். ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து இனங்களுக்கிடையில் மோதல்கள்,பிளவுகள் ஏற்படாதிருக்க மக்களைப் பொறுமை காக்கச் செய்யவும், திசைமாறும் அரசியல் திருகுதாளங்களை வெளிப்படையாக விமர்சித்து அரசால் வழங்கப்பட்ட குண்டு துளைக்காத வாகனத்தை நிராகரித்தவருமான கொழும்பு பேராயர் மல்கம்ரஞ்சித் ஆண்டகை அவர்களின் அமைதிக்கான ஆக்கப்பணிகளுக்காக எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

இலங்கை பல்சமயக் கருத்தாடல் நிலையத்தினராகிய நாம் 2014ம் ஆண்டு தொடக்கம் நல்லிணக்கம் சமாதானத்திற்காக நாடு முழுவதும் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றி வந்திருக்கின்றோம்.

கிறிஸ்தவம், இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய சகல தரப்பினருடனும் கருத்தாடல்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்து இலங்கையில் ஏற்பட்ட தீவிரவாதத் தாக்குதல்கள் மட்டில் கூடிய அவதானிப்புக்களையும் கொண்டிருக்கின்றோம்.

தீவிரவாதத் தாக்குதல்களால் அச்ச உணர்வும், பய உணர்வும் ஏற்பட்டுள்ளது. அனர்த்தம், அனர்த்தத்திற்குப் பின்னரான நிலையில் இளையோர் மற்றும் சிறுவர்களின் மனதில் படிந்துள்ள தாக்கங்களிற்கு என்ன செய்யப் போகிறோம்.

மூன்று தசாப்த யுத்தம் அதன் பின்னர் யுத்தமற்ற நிலையில் இவ்வாறான அசம்பாவித நிலை எவ்வளவு காலத்திற்குத் தொடரப் போகின்றது. தொலைக்காட்சி களிலும், வானொலிகளிலும், பத்திரிகையிலும் வெளிவருகின்ற செய்திகளை சிறுவர்களும் பார்க்கின்றார்கள். நீண்ட காலத்திற்கு இதன் தாக்கம் அவர்கள் என்ன நிலைக்கு இட்டுச் செல்லப் போகின்றது.

சிறுவர்கள், இளையோர் மட்டில் சிந்தனைகள் சிதறடிக்காமல் நல்நெறியின் ஆன்மீக வழிகளில் தூண்டி ஆற்றல்கள் திறன்களில் நாட்டத்தைத் தூண்டக்கூடிய குழு முயற்சிகளை ஏற்படுத்துவதற்கு சமூக வழிகாட்டிகள் முன் வரல் வேண்டும். இத்தருணங்களைத் திசை திருப்பி பகைமைகளைத் தூண்டி பிரிவினைகளை வளர்க்க முனைவோரும், எமது சூழலில் மறைவாகச் செயற்படும் பயங்கரவாதமே என்பதனை உணர்ந்து அத்தகைய மனநிலையில் உள்ளவர்களை ஆற்றுப் படுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு எங்கும் பயங்கரவாதிகளால் உயிரிழந்த, காயப்பட்ட உறவுகளுக்கான பிரார்த்தனைகளும், அஞ்சலிகளும் எதிர்கால மத நல்லுறவை ஆற்றுப்படுத்த மேற் கொள்ள வேண்டிய வழிகளை சர்வமதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், நாட்டு மக்கள் ஒன்று கூடி மனம் விட்டு உறவாடி, உரையாடி பய உணர்வைக் களைவதற்கான மனிதாபிமான நிகழ்வுகள் தொடர வேண்டும்.

மூன்று இன மக்களும் வாழுகின்ற கிழக்கு மாகாணத்தில் இன நல்லுறவை ஏற்படுத்தக் கூடிய ஒருவரே ஆளுநராகச் செயற்பட வேண்டும். இன்றைய ஆளுநர் நல்லுறவை ஏற்படுத்தத் தவறும் சந்தர்ப்பங்கள் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

அவசரகாலச் சட்டம் ஏகமனதாக நிறைவேறியதன் மூலம் வடக்கில் மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தீர்க்க வேண்டிய தீவிரவாதத்தை முற்றாக ஒழிக்கப் பாடுபடும் தரப்பினர் சட்டத்தை காரணம் காட்டி எடுக்கும் நடவடிக்கைகள் ஒருபோதும் நாட்டின் நலனைப் பேணப் போவதில்லை. வடக்கைத் தொடர்ந்தும் அச்சுறுத்துவதும் நல்லிணக்கத்திற்கு பாதகமாகும். வெசாக் நிகழ்வுகள் உட்பட சகல சமயங்களின் பெரும் விழாக்கள் ஆடம்பரமாக அனுஷ்டிப்பதைத் தவிர்த்தலும் பயனுள்ளதாகும்.

# மரணித்தவர்களுக்கு யாழ்.பிரதேச செயலகத்தில் உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்.பிரதேச செயலகத்தில் குண்டுத் தாக்குதலில் பலியானவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.பிரதேச நல்லிணக்க குழுவின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற உணர்வுபூர்வமான இந்நிகழ்வில் யாழ் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ, இஸ்லாமிய பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் அருட்சகோதரிகள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இரண்டு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வையடுத்து மெழுகுதிரிப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. இதையடுத்து நிகழ்வில் உரையாற்றிய அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் பேசுகையில்,நாட்டில் சில இடங்களில் அசம்பாவிதம் ஏற்பட்டாலும் அது நாட்டின் பல்வேறு தரப்புக்களிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இவற்றின் மத்தியில் நாமனைவரும் மனிதர்கள் என்ற உணர்வுடன் அனைத்து மதங்களையும் மதித்து இலங்கையர் என்ற உணர்வுடன் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

இதையடுத்து இந்து சமயக் குருக்கள் ராஜராஜேஸ்வர சர்மா உரையாற்றுகையில்; இறைவன் மனிதனைப் படைத்தான். ஆனால் மனிதனே மதங்களைப் படைத்தான். நாம் மதரீதியான, இன ரீதியான வேறுபாடுகளைக் களைந்து அனைத்து மதங்களின் கருத்துக்களையும் ஏற்று மதித்து நடக்க வேண்டுமெனக் கோரினார்.

நிகழ்வில் இஸ்லாம் மதம் சார்ந்து மௌலவி ஏ.எம் அஸீஸ் பேசுகையில்; இவ்வுலகைப் படைத்து மனிதனை இறுதியாகப் படைத்தார். ஆகவே மனிதர்களாகிய நாம் ஒற்றுமையாக பிறமதங்களை மதித்து செயற்பட வேண்டுமென வலியுறுத்தினார்.மேலும் தற்பொழுது நாட்டில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் அனைவர் மனதிலும் ஏற்பட்டுள்ள தாக்கங்கள்ஆற்றுப் படுத்தப்பட வேண்டும் என்பதுடன் இவ்வாறான ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் கிராம மட்டங்களுக்குச் சென்றடைய வேண்டும் என யாழ். பிரதேச நல்லிணக்கக் குழுவின் செயலாளர் ஜோசப்பாலா தெரிவித்தார்.

# யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375
வைகாசி


## சிவில் சமூகங்கள் ஒன்று பட வேண்டும்



**நாட்டில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு இன்னுமொரு பெரிய குண்டுவெடிப்பை அரசாங்கத்திற்கு நிகழ்த்தியுள்ளது**

– உலகத்தமிழர் பேரவைத் தலைவர் இம்மானுவேல் அடிகள் –

**நாட்டில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு இன்னுமொரு பெரிய குண்டுவெடிப்பைக் கொண்டு வந்திருக்கிறது அரசாங்கத்திற்கும். அரசாங்கம் சார் அமைப்புகளிற்கும். குற்றஞ்சாட்டுதல். மூடி மறைத்தல் போன்றவற்றால் அரசாங்கம் தள்ளாடுகிறது. இவ்வாறு யாழ்பிரதேசசெயலக மண்டபத்தில் நிகழ்வில் உலகத்தமிழர் பேரவைத் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் அடிகள் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ஏற்கனவே 51 நாட்கள் அரசாங்கமேயில்லாத நிலையில் இருந்தார்கள். இன்னுமொரு தடவை அனர்த்தத்தின் மூலம் எமது நாட்டுக்கு மிகவும் ஆபத்தான நிலை மேல் மட்டத்தில் நடக்கும் காரியத்தை கவனத்தில் எடுத்து சிவில் சமூகம் அவதானமாக இருக்க வேண்டும்.**

சமூகத்தை வழிநடத்துகின்ற உணர்வூட்டுகின்றதில் ஊடகங்கள் முக்கியமானவை. அவை நடுநிலையாக செயற்படுதல் வேண்டும். சிவில் சமூக அமைப்புக்கள் இன்னும் பெருக்கெடுக்க வேண்டும் நாங்களும் பெருஞ் சமூகமாக மக்களைத் திரட்ட வேண்டும், வழி நடத்த வேண்டும்.போர் முடிந்த பின் புலிகளை நாம் அழித்துவிட்டோம் என்று சர்வதேச மாநாடு நடத்தினார்கள். வெளிநாட்டுக்கு பாடம் சொல்லி விட்டு நித்திரைகொண்டு இருந்தபோது தான் இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இந்தியா கொடுத்த முன்னறிவுறுத்தலைக் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அடிமட்டத்திலிருக்கிற சிவில் சமூகங்கள் ஒன்று திரள வேண்டும். எங்கள் குரலையும், சக்தியையும் வெளிப்படுத்த வேண்டும். வருங்காலத்தில் இன்னும் கேவலமான சம்பவங்கள் நடக்கும் போலத் தெரிகிறது. தள்ளாடும் அரசு விழுந்தாலும் அதிசயப்பட வேண்டியதில்லை'.வாள்வெட்டுக்களும் வேறுவிதமான அசம்பாவிதங்களும் நடைபெறுவதற்குக் காரணம் இவை விரக்தியிலிருந்து தான் தோற்றம் பெறுகின்றது. இளையோர் நல்ல காரியங்களைச் செய்ய முன் வரவேண்டும். இளையோரை நோக்கி மதத் தலைவர்கள் நெருங்கி வர வேண்டும்.' எல்லோரும் சுய ஆய்வுக்குட்படுத்தப் பட வேண்டிய தருணம் என்றார்.

### மதங்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கான தாக்குதல்கள்

- கலாநிதி அகிலன் கதிர்காமர் -
யாழ்.பல்கலைக்கழகம்

மதங்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கான தாக்குதல்களாகவே கடந்த 21ம் திகதி நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலை நான் பார்க்கின்றேன். இதை அவர் எதிர் கொள்வதற்கு எம்மவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று கலந்துரையாடல்களை நடத்த வேண்டும். இவை கொழும்பு–யாழ்ப்பாணம் எனும் மட்டங்களில் நடத்துவதுடன் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் எல்லா இடமும் சென்று கலந்துரையாட வைத்தால் அங்கிருக்கும் இளையோருக்கிடையிலான பிளவுகளைக் குறைக்கக் கூடியதாக இருக்கும் என்று யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் யாழ்.மஸ்ஜித் முஹம்மதியாவில் பல்சமயக் கருத்தாடலில் தெரிவித்தார்.

## சமயம் அடிப்படை வாதமாக மாறியிருக்கின்றது



திரு.லலீசன். உப அதிபர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை

எங்கள் நாட்டில் எமது சமூகங்களை பல்சமயங் களைக் கற்கின்ற நிலை அந்த நாட்களின் சமயப் பாடங்களில் இருந்தது. அது இப்போது இல்லாது போனதால் சமயம் அடிப்படை வடிவமாக மாறியிருக்கின்றது. புண்ணுக்கு மருந்து கட்டுவது நல்லது தான், புண்ணே வராமல் காப்பது அதை விடச் சிறந்தது.அழகிய நாடு இலங்கைத் திருநாடு. இதில் ஒவ்வொரு சமூகங்களும் வாழ நினைக்கிறார்கள். ஒரு அங்கீகாரத்தை தேடிப் போகிறார்கள். நாம் ஒவ்வொருவரையும் அங்கீகரிக்கின்ற போது தான் நல்லிணக்கத்தைக் கொண்டு வர முடியும்.

எமது கலாசாலை சார்ந்து பல இஸ்லாமியர்கள் கற்கின்றார்கள். அவர்கள் மனதில் அடிப்படை வாதம் இல்லை. கத்தி மேல் நடக்கின்ற பணி போன்றது சமயப் போதனை. பிறருடைய உள்ளத்தை வருத்தாமல் நல்லிணக்கமாய் வாழும் விதத்தில் பிற சமயப் போதனைகள், கற்பித்தல்கள் அமைய வேண்டும் எனப் ஜெசாக் நிறுவன மண்டபத்தில் கூறினார்.

## தீவிரவாதத்திற்கு யாழ்முஸ்லீம்களின் கண்டனத்தைத் தெரிவிக்கிறேன்



-அசீஸ் மௌலவி -

மனித குலத்துக்கே விரோதமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இது இனியும் தொடராது வேரோடு அழிக்கப்பட வேண்டும். அழகான நாட்டின் அமைதியை குலைத்த சர்வதேச தீவிரவாதிகளின் வலையில் சிக்கிய குறிப்பிட்ட சிலரின் கொடூரமான செயலுக்கு இஸ்லாத்தில் இடமில்லை. வன்முறையைத் தூண்டுகின்ற செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். ஒரு இனம் மற்ற இனத்தைப் பற்றி சந்தேகத்துடன் இருக்கும் போது அபிவிருத்தி என்பன தடைப்படும். முஸ்லீம், இந்து, கிறிஸ்தவம் எனப் பல்வகையான சமயங்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு எமது அஞ்சலிகள் செலுத்துகின்றோம். அவர்கள் துயரில் கண்ணீர் வடிக்கின்றோம். பல்சமயக் கருத்தாடலில் அசீஸ் மௌலவி யாழ்பிரதேச செயலக மண்டபத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### தற்போதைய களங்கமான சூழ்நிலையை மாற்ற வேண்டும்

கிருபானந்தக் குருக்கள் -



கடந்த காலத்தில் இஸ்லாமியரை வெளியேற்றிய நிகழ்வு சரியென்று சிலர் என்னிடம் கூறினார்கள். நான் அவர்களுக்குச் சொன்னேன் நூற்றாண்டுகளாக இஸ்லாமியர் எம்முடன் இணைந்து வருகிறார்கள். முரட்டுத் தனமாக அடுத்த மதத்தினரை குறை சொல்லக் கூடாது. வெளிநாட்டுத் தீவிரவாதிகள் அவர்களைப் பகடைக்காய்களாக மாற்றியுள்ளார்கள். நல்லதொரு எதிர்காலத்தை தற்போதைய களங்கமான சூழ்நிலையை மாற்ற வேண்டும் என இலங்கை பல்சமயக் கருத்தாடல் நிலையத்தில் நடை பெற்ற கருத்தாடலில் கிருபானந்தக் குருக்கள் தெரிவித்தார்.

## சிறுவர்கள், இளையோர்களை வழி நடத்தும் செயல்கள் அவசியம்



திரு.சுகிர்தராஜ் - ஜெசாக் நிறுவன இணைப்பாளர்

30 வருட யுத்தம் நிறைவு பெற்று வந்த மாற்ற நிலையில் மீளவும் ஏற்பட்ட அசாதாரண சூழலில் சிறுவர்கள், இளம்பராயத்தினர் மத்தியில் இந்த நிகழ்வுகள் நீண்ட கால விளைபயன்களைத் தரப்போகின்றது. அனர்த்தம் அனர்த்தத்திற்குப் பின்னரான நிலை என்பதில் சமூகங்கள் இந்த விடயங்களில் சிறுவர்கள், இளையோர்களை வழிநடத்தும் செயல்கள் அவசியம் தொடர்பாக செயல் திட்டங்களை முன்னெடுக்க தூரநோக்குடன் செயல்பட வேண்டும் என்றார்.

### சிந்திக்க சில வரிகள்..

ஹுஸ்னாறிஸ்மி. யாழ்ப்பாணம்.

★ கவலையை விட மிகவும் கொடுமையானது ஒருவனிடமுள்ள சந்தேகமாகும்

★ இலட்சியம் இல்லாத வேலை எண்ணெய் இல்லாத விளக்குக்கு சமமாகும்

★ எந்தப் பேச்சானாலும் ஒன்றுக்கு இரண்டு முறை ஆலோசனை செய்தபிறகே பேச வேண்டும்

★ பணம் பேசத் தொடங்கும் போது உண்மை ஊமையாகி விடுகின்றது.

★ நல்ல செய்ல்களை நாமே முன்னின்று செய்ய வேண்டும்

★ உயர்ந்த எண்ணம் கொண்டவருக்கு தனிமை என்பது எப்போதும் இல்லை

### விதவை (புதுக்கவிதை)

ஜம்ஸியா. நீர்கொழும்பு.

வெடித்துப் பறந்த பருத்திப் பஞ்சாய்
வெண்ணிறப் புடவையில்
வேலியில்லா பயிர்!

வாழ்க்கைக் கடலில்
துடுப்பை தொலைத்த படகு!.....

முகவரி தவறிய
வெள்ளைக் காகிதம்!.....

ஜோடியை இழந்த
பேடைக்கிளி!.....

விதி என்ற வெள்ளத்தில்
வீசப்பட்ட அக்கினிரோஜா!.....

அமாவாசைக்கு
அடங்கிப்போன அழகுநிலா!......

### வாரும் மனிதா...

ஜாயிஷா அப்ரார். யாழ்ப்பாணம்.

கனவுகள் கானல் நீராகிப் போகுதம்மா......
கண்ணீரின் கதைகள் தொடருதம்மா..........
அடியும் உதையும் வாழ்வைச் சூறையாடுதம்மா.....
இளம் பிஞ்சுகள் என்றும் பாராமல் சீரழிக்கும்
காலம் தொடருதம்மா.
பெண்ணினம் கொதித்து கொந்தளிக்குதம்மா....
சில கொடியவரின் கோரத்தைப் பாருமம்மா...
விடுதலை அடைந்த நம்நாடு இன்றும்
பயத்தால் நடுங்குதம்மா......
தனிமையில் பெண்ணினம் நடப்பதற்கு
வழிகள் கூட இங்கு இல்லையம்மா.
வாரும் மனிதா உனக்கும்
மனிதாபிமானம் இருந்தால்
பெண் இனத்தைப் போற்ற அல்ல
காப்பாற்றிப் பாதுகாக்க



இந்தியப் பின்னணி பாடகர் ஏ.எம்.ராஜா நினைவு தினம் அண்மையில் யாழ் மாவட்ட சர்வோதய நிலையத்தில் கலாபூஷணம் எம்.எல்.லாபிர் தலைமையில் இடம்பெற்றபோது "சமூகஜோதி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். V.G நஸ்லிம் (உரிமையாளர் டொபாஸ்) விருதை முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் திரு.விந்தன் கனகரட்ணம், யாழ்மாநகரசபை உறுப்பினர் திரு.நா.தனேந்திரன் வழங்கினார்கள்

# வளர்ச்சிப் பாதையில் வலிகாமம் கிழக்கு



செயலக முன்தோற்றம்

யாழ்குடாநாட்டின் உதயமாக விளங்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவானது கல்சிய செம்மஞ்சள் இலற்றசோல் எனப்படும் மண்ணைக் கொண்ட செழிப்பான விவசாயப் பிரதேசமாகும். இது யாழ்மாவட்டத்தின் 10% நிலப் பரப்பினைத் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது.

இப்பிரதேசம் 31 கிராம அலுவலர் பிரிவுகளையும், 111 கிராமங்களையும், 22,863 குடும்பங்களையும் கொண்டமைந்துள்ளது. 01 பிரதேசசபையும், 05 உப பிரதேச அலுவலகங்களையும், தன்னகத்தே கொண்டுள்ளது. 39 பாடசாலைகளையும், 89 முன்பள்ளிகளையும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையினையும் மற்றும் கல்வியியற்


நிலாவரை நீரூற்று   பொக்கணை

கல்லூரியினையும் கொண்டு கல்வி வளாகத்தில் சிறப்படைந்து விளங்குகின்றது.

வரலாற்று சிறப்பு வாய்ந்த இடங்களாக நிலாவரை வற்றா நீரூற்று மற்றும் பொக்கணை நீரூற்று என்பனவற்றினைத் தன்னகத்தே கொண்டு நீர்வளத்தில் செழிப்படைந்து காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் 37% வாழைப்பயிர்ச் செய்கையினையும், பணப்பயிரெனக் கருதப்படும் திராட்சைப் பயிர்ச்செய்கையினையும், வெங்காயம், பீற்றூட், கரட், கோவா, கறிமிளகாய், லீக்ஸ் மற்றும் முள்ளங்கி ஆகியன சிறப்புற விளையும் பிரதேசமாகவும், காணப்படுவதோடு கோழி, மாடு, ஆடு என்பன பண்ணைகளாக வளர்க்கப்பட்டு கால்நடை வளர்ப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் பிரதேசமாகவும் விளங்குகின்றது. ஆயிரக்கணக்காக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி இடையில் செயல்படாதிருந்த


புராதன வணக்கத்தலங்கள்

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை மீள் எழுச்சி பெற்று தற்போது தரமான உற்பத்திகள் ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன.

தான்தோன்றியான திருமஞ்சன தீர்த்தக் கிணற்றினைக் கொண்டுள்ள நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலும், கஜபாகுமன்னன் (கி.பி 113–135) சோழநாட்டிலிருந்து கொண்டு வந்த கண்ணகை அம்மன் சிலைகளால் ஸ்தாபிக்கப்பட்ட கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலயமும் இப்பிரதேச மக்களின் சமயாசாரத்தை எடுத்துக் காட்டுகின்றன.

# எம்குழந்தைகளும் நாமும்

சிமாக் உவைஸ். பேருவளை.



நாம் இவ்வுலகில் பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்றபோது எம் வாழ்வுக்கு அர்த்தமுள்ளதாக எமக்கு இறைவனால் தரப்படும் அந்த அன்புப் பரிசாம் மழலைச் செல்வங்களை வளர்த்தெடுத்து, ஆளாக்கி, பேராக்கி, சாதனையாளர்களாக்கிப் பார்ப்பதற்காக நாம் அரும்பாடு படுகின்றோம். எம் கனவுகள் அவர்கள் மூலம் நனவாகும் போது ஆனந்தப்படும் நாம் அக்கனவுகள் கலைக்கப்படும்போது கதறித் துடித்து கவலையில் மூழ்கிக் கலங்கித் தவிக்கின்றோம். இங்கே கதான் நம் ஆரம்ப வளர்ப்பு தப்போ என்று எண்ணுமளவு எம் எதிர்பார்ப்புக்கள் சுக்குநூறாக்கப்படுகின்றது. ஆதலால் குழந்தை வளர்ப்பிற்காக நீண்ட காலப் பொறுப்புத் தாரியாக இருக்கும் நாம் அவர்களுக்கு அர்ப்பணிப்புடன் வளரத் தொடங்கும் வேளையிலே படிப்படியாக நற்செயல்களின் அவசியங்களை உறவுகளின் அத்தியாவசியங்களை பேணுதலை வாழ்க்கையின் யதார்த்தங்களை உணரும் தன்மைகளை தெரிந்து கொள்ளக்கூடிய முறையிலே அவர்களை ஆயத்தப்படுத்துவது எமது தலையாய கடமை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதன் பிரகாரம் அவர்கள் வாழ்க்கையை எதிர்கொள்ள வேண்டியளவு சக்தியும், ஆளுமையும், ஆற்றலும் உள்ளவர்களுக்கு உயர்ந்தோர் ஆக்குவதற்காக சிறுகச் சிறுக படிப்படியாக எமது உபதேசங்களை, நன்மொழிகளைப் பாசத்துடனும், அன்புடனும் எடுத்துக் கூறி அவற்றை அவர்கள் மனதில் பதித்து வளரும் வல்லவர்களாக தயாராக்க வேண்டும். நிச்சயம் அவர்கள் வாழ்வு சிறந்து வளரும்.

இந்த வகையிலே எம் பிள்ளைகள் பெற்றோராகிய எமக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும், எம்மை மதிப்பவர்களாகவும் வாழ வேண்டுமானால் நாம் அவர்களுக்கு முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். எப்பொழுதும், எச்சந்தர்ப்பத்திலும், எல்லா விசயத்திலும் இறைவனுக்கு அஞ்ச வேண்டுமெனும் அச்சப்பாட்டை எடுத்துச் சொல்லி எப்பொழுதும் எம்மை எங்கிருந்தாலும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்று கூறி வழி காட்ட வேண்டும். அதை விடுத்து மனிதர்களுக்கோ அவர்களது அதிகாரங்களுக்கோ பயப்படக்கூடாது என்பதையும் வலியுறுத்த வேண்டும். மேலும் அவர்களுக்கு நண்பர்கள் முக்கியத்துவத்தை உ ண்மையான நண்பர்களின் நலனைக் கூறி நாமே அவர்களுக்கு நண்பர்களாக நடப்பின் நட்பின் உயர்வுகள் வளரும். ஏழை, அனாதைகளை ஆதரிப்பதையும், அடுத்தவருக்கு உதவி செய்து வாழ்வதன் சந்தோசத்தையும், வலது கையால் கொடுக்கும் தர்மம் இடது கைக்குத் தெரியாதளவும் தானதர்மம் பேணும் மகிமையும், சொல், செயல்களின், நீதி, நேர்மை, உண்மைகள் இருப்பதன் அவசியத்தையும் பொய்களினால் ஏற்படும் பாவத்தையும் தெரியப் படுத்துங்கள். இன்னும் தோல்வி என்பதும், வெற்றி என்பதும் ஆரம்பம் என்று வெற்றி என்பதுன் ஆரம்பம் தெரியப்படுத்தி அவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்க்க முயலுங்கள். அடுத்தவரை ஏளனம் செய்தல், எள்ளிநகையாடுதல் தவிர்த்து சுயநலப் போக்கை நீக்கி பொதுநலம் பேணவும், விடாமுயற்சியே வெற்றிக்கு வழிகோலும் என்பதைத் தெளிவுபடுத்தி அவர்களை ஏகாந்தத்துடன் வளர்த்து வாருங்கள் பெற்றோர்களே!

இதன் மூலம் ஆரம்ப அத்திவாரம் அசத்தலாகப் பேணப்பட்டால் எம் வாழ்நாளில் முடிவு வரை ஆட்டம் காணா ஒரு குடும்பமாய், குதூகலமாய் நாம் வாழலாம். என் பிள்ளை நடத்தை சரியில்லை போதையில் சிக்கி சீரழிகின்றான். இரவு நேரங்களை வீதியில் கழிக்கின்றான். எங்களை எடுத்தெறிந்து பேசுகின்றான். யாரையும் மதிக்க மாட்டேன் என்று கங்கணம் கட்டுகின்றான் என்று மெல்லவும் முடியாது முழுங்கவும் முடியாது துன்பக்கடலில் சிக்கித் துயருறும் பெற்றோர் எண்ணிக்கைகள் ரொம்ப ரொம்பக் குறையும். ஆரம்ப அச்சாணியாகி விடும் பெற்றோர்களே! எதையும் எடுத்தோமா? கவிழ்த்தோமா ? என்று பாராமுகமாக்காது நாமும் நல்லதையே சொல்லி, நல்லதையே செய்து நம் பிள்ளைகளையும் நலம் காண வாழ வைப்போம்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்

**யாழ்ப்பாண சமூகத்தினரினால் வெளியிடப்படும் அறிக்கை**
**கிறிஸ்தவ, இந்து, பௌத்த மற்றும் முஸ்லிம் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள்)**

யாழ்ப்பாணத்திலே வசித்து வரும் பல்வேறு சமய மற்றும் இனக்குழுமங்களைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில், நாம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையிலே மேற் கொள்ளப்பட்ட பயங்கரமான தாக்குதல்களை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தத் தாக்குதல்களின் போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கும், காயமடைந்தோருக்கும், இந்தச் சம்பவம் காரணமாக இலங்கை முழுவதிலும் மன வேதனையினால் பாதிக்கப் பட்டவர்களுக்கும் நாம் எமது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

போருக்கு முன்னரும், போரின்போதும், போருக்குப் பின்னரும் மக்கள் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழும் ஒரு நீண்ட வரலாறானது எம்மத்தியிலே உள்ளது. பத்து வருடங்களுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்ததில் இருந்து சமூகங்களின் மத்தியிலே நிலவும் உறவுகளினை மேலும் பலப்படுத்துவதற்கு சாதாரண மக்கள் தமது உறுதிப்பாட்டினை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். எனினும் குறுகிய எண்ணம் படைத்த வன்மம் மிக்க சமய சார் மற்றும் இனத்துவம் சார் தேசியவாத சக்திகள் எமது சமூகங்களைப் பிரிக்கும் முயற்சிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. பிளவுகளை ஏற்படுத்தும் இவ்வாறான சக்திகள் தோற்கடிக்கப்படல் வேண்டும். இந்த சக்திகளைத் தோற்கடிப்பதற்கு உண்மையான சமய நம்பிக்கைகளை உடையவர்களும், முற்போக்கான கருத்தியல் நிலைப்பாடுகளை எடுத்திருப்பவர்களும் முன் வருதல் அவசியம்.

மக்களைப் பாதுகாக்குமாறு அரசினையும், மக்களின் பாதுகாப்புக்கு முதன்மை நிலை கொடுக்கும் படியாக எல்லா அரசியல் தரப்பினரையும் கேட்பதுடன், அவர்கள் இந்தத் துன்பியற் சம்பவத்தில் இருந்து தமக்கு அரசியல் இலாபம் கிடைக்கக் கூடிய விடயங்களில் ஈடுபடுவதனைத் தவிர்க்கும் படியும் நாம் கோருகின்றோம். ஜனநாயக விழுமியங்கள் பேணப்பட வேண்டும் எனக்கோரும் நாம் கொடூரமான அடக்குமுறைகளை உருவாக்கும் நடவடிக்கைகளை மக்கள் மீது திணிப்பதற்கும், பெரும்பான்மைவாதக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்கும். சமூகத்தினை மேலும் இராணுவ மயமாக்குவதற்கும் தற்போது நிலவும் அச்சமூட்டும் சூழலினைப் பயன்படுத்த வேண்டாம் எனவும் வலியுறுத்துகிறோம், பொறுப்புணர்வுடன் செயற்படும் படியும், ஆத்திரமூட்டக்கூடிய கோசங்களையும், வதந்திகளையும் பரப்புவதனைத் தவிர்க்கும் படியும், சமூகங்களுக்கு இடையிலே நம்பிக்கை கட்டியெழுப்பப் படுவதற்கான முயற்சிகளுக்கு பங்களிக்கும் படியும் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களை நாம் கோருகின்றோம். உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலுக்கு உட்பட்டு இனவாதத்தினையும், தீவிரவாதத் தன்மையினையும் முன்னெடுக்கும் சக்திகளின் எழுச்சி குறித்து நாம் மிகவும் ஆழமான கரிசனை உடையவர்களாக இருக்கிறோம். உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற இந்தத் துன்பியல் நிகழ்வானது. இந்த நாட்டின் மக்கள் கூடி வாழ்தல், அமைதி மற்றும் நீதி என்பனவற்றினை உருவாக்குவதற்குத் தமது பற்றுறுதியினை மீள் வலியுறுத்தக் கோரும் ஒருவிழிப்புணர்வினைத் தூண்டியிருக்கும் ஒரு சம்பவமாகக் கூட அமைகின்றது.

யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும், முஸ்லிம் சமூகத்தின் மீது பதிலடித் தாக்குதல்கள் நடைபெறக் கூடும் என்ற அச்ச உணர்வுகளை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. வன்முறையின் எல்லா வடிவங்களையும், வெறுப்பினைத் தூண்டும் பேச்சுக்களையும் கடுமையாக எதிர்க்கும் படியும், பரஸ்பர மரியாதையும், கௌரவமும் உத்தரவாதப்படுத்தப்படும் வகையிலே சமூகங்களுக்கிடையிலான நாளாந்த உறவுகளை வலிமையூட்டுமாறும், எல்லாச் சமூகங்களுக்கும், அவற்றின் தலைவர்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். அச்சத்தினையும், தேசிய ரீதியான துயரத்தினையும் நாம் எதிர்கொள்ளும் இந்த வேளையில், எங்களுடைய துக்கம் சுதந்திரத்தினை ஏற்படுத்துவதற்கான எமது உறுதிப்பாட்டுக்கும், பன்மைத்துவமான, ஜனநாயகம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கான எமது பற்றுறுதிக்கும் வலுச்சேர்க்கும் வகையில் அமைய வேண்டும்.

## நினைவகலா நினைவுகள்





## பட்டதாரிகளின் வேலைவாய்ப்புகள் நிறைவேறுமா?

வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டங்கள், வாக்குறுதிகள் யானைப்பசிக்கு சோளம்பொரி போல காலம் கடந்தும் கபட நாடகம் தொடர்கிறது. இதனால் பாதிக்கப்படுவோர் வயது ஏற்றமும், நம்பிக்கையீனமும் ஏமாற்றத்தையே ஏற்படுத்துகிறது.

ஏனைய மாவட்டங்களை விட போரைச் சாட்டாக வைத்துக் கடந்த 40வருடங்கள் அரசவேலைக்கு வடக்கு,கிழக்கு மக்களின் வேலை வாய்ப்புகள் தடைப்பட்டன. சந்தேகங்கள் எதிர் கொள்ள முடியாத படித்த வாலிபர்களின் வேலை வாய்ப்புகளுக்கு ஏனைய மாவட்டங்களை விட வெகுவாகப் பின் தள்ளப்பட்டவர்களுக்கும் சமநிலை வேலைவாய்ப்புக்களை விட இரட்டிப்பாக வழங்க வேண்டியதை விட அரச மட்டத்திலோ, அரசியல்வாதிகளோ சிந்திக்காதது மட்டுமல்ல தற்போது வாக்குறுதிகள் வழங்கிய வேலை வாய்ப்புகளும் காலதாமதப்படுத்தி படித்த வாலிபர்கள் விரக்திக்கு உள்ளான நிலையில் அடுத்த தேர்தல் வாக்குறுதிகளுக்கு பேசுபொருளாக்கும் அரச தந்திரம் மாகாண மட்டத்திலும் வாய்ப்பேச்சோடு காலம் கடத்துவதைப் பொறுப்புள்ளோர் விரைந்து செயல்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

# சாத்தான்களும் வேதம் ஓதுகிறது

என்ன நடக்குது எங்கட நாட்டில..........

யாரிட்டக் கேக்கிறியள் இதைப் போய் எங்கட அரசியல் தலைமையளிட்ட கேட்டுப் பாருங்கோ எனக்கொண்டும் தெரியாது. யாரோ சொல்லித்தான் தெரியும். எல்லாம் இரகசியமாத்தான் நடந்தது. நாங்க நம்பேல்ல அது தான் நடவடிக்கை எடுக்கேல்ல எண்டு தப்பிக்க முனைகிறார்கள். இதைத் தான் பொறுப்புள்ள எல்லாரும் சொல்லினம் என மரத்தடியில பேப்பர் படிச்சுக் கொண்டிருந்த தில்லையர் விசுவாத்திக்கு கூறிக் கொண்டார்.

எல்லாரும் அடுத்த தேர்தலுக்கு யாரை மடக்கிறது. யாரோட சேர்ந்து இடம் பிடிக்கிறது எண்டதால தங்களுக்கு பாதுகாப்பு வேண்டும். அது கூட வெளிப் பகட்டு நாடகங்கள் தானே என அன்னமக்கா கச்சான் பெட்டியைப் பர்விக் கொண்டாள்.

இதுக்குள்ள தமிழரைத் திசைதிருப்புறதில ஒண்டு தான் முண்டி அடிப்புக்களும் அதனால் புலி பூச்சாண்டி கூறி கல்வித்தளத்தைக் குழப்புவதும் வாய்ச்சவடால் விட்டு தம்மை பெரிது படுத்தும் உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு வெறுவாய்க்கு கிடைத்த அவலாகியது பாத்தியளே எண்டார் விசு வாத்தி.

இதில ஒண்டை கவனிச்சியளே போதைவஸ்து வியாபாரியளை பாதுகாக்கிற விதத்தை வந்தவர்கள் மூண்டு அடுக்கு பாதுகாப்புடன் இராசமரியாதையோட வந்த மார்கந்த மதூஸ் வியந்து போனாராம்எங்கட பெடியளை எப்படிக் கைது செய்து கொண்டு சென்றார்கள் எண்டத காணாமல் போன பெற்றாரின் கண்ணீர் பதிலளிக்கும் பாருங்கோ என்றாள் அன்னமக்கா.

இனி போதை வியாபாரியின் தங்கத்திட்டமிட நல்ல வசதி கிடைக்கும் சிறைக்குள்ளயும் ,வெளியிலயும் சேர்த்து வைத்த பணம் பத்தும் செய்யும்பாதாளம் வரை பாயும், அதோட அரச பங்களிப்புக்கு பல உயர்நிலைப் உதவிகளும், தம்மைப் பாதுகாக்க செயல்படாமல் போவார்கள் என்ற தில்லையின் கூற்று சரிதான் எங்களட துப்பறியும் திறமையளுக்க தானே நாட்டில எல்லாப் பயிற்சிகளும், பதுக்கப்பட்ட நிதிகளும் வெளி வருது. இது

## கேட்டியளே சங்கதி



- வானம்பாடி -

போதை வியாபாரிகளின் கணக்கு வழக்கும் பேச்சோடு கரையும் தானே என்றார் அன்னமக்கா.

மக்களுடன் உறவாட கீழ் இறங்கி பணி செய்யாத இளையோரைக் கண்டாலே வெறுக்கும் உயர் மட்ட சாத்தான்களும் வேதம்ஓதுற காலம் இப்ப அனுதாபம், அஞ்சலிகளில் குரல் எழும்புற மதஅரசியல் தலைவர்கள் மக்கள் மட்டத்திற்கு இறங்கி ஒரு சிலர் பணி செய்ய மாறுவேசத்துடன் சாத்தான்கள் வேதம் ஓதுறது போலவே மதத்துவேசிகளும் சமய மேடையளில குரோதங்களைக் கொக்கரித்து வருவது வேடிக்கை தான் என்றார் விசுவாத்தி.

எல்லாரும் பயப்பிராந்தியோட கலங்கிப் போயிருக்க ஒரு சிலர் கொண்டாட்டம் கும்மாளம் போடுறது தான் புரியவில்லை எண்டார் தில்லையர். எல்லாம் வாசியளோட வருவாய்க்கு வழிவரும் எண்டு தான் வழி தெருவில சோதனை செய்யிறவையள். வாள், கத்தியோட முகமூடி போட்டு அலையிறவையள் அள்ளிக் கொண்டு போனாலும் விலைவாசி உயர்ந்தாலும் கேட்க ஆளில்லை எண்ட நினைப்புத் தான்.

கஞ்சா கறுப்பர்களும், கைலஞ்சப் பிரியர்களும், வெளிநாட்டார் வீடு கட்டினாலும் இனி வர மாட்டினம் எண்ட நிலையில அனுபவிக்க கிடைச்சா எரியிற வீட்டில சுருட்டுப் பத்திற மாதிரித் தானே ஒருசிலருக்கு இருக்கும் எண்ட தில்லையின் கணிப்புகளும் தப்பாது தானே?

அவசர அவசரமா அவசரகாலம் வந்திட்டு அனுபவித்த பலருக்கு இது எப்படி பயன்படுமோ எண்ட கலக்கம் இளையோர் எதிர்காலத்தை எப்படி நிர்ணயிக்கப் போகிறது. எல்லாம் பணத்தால பாத்துக்கலாம் என்றவர்கள் அது பாதாளம் வரையும் பாயும் எண்ட நம்பிக்கை தான்.

# இளையோர் களரி

## சிறுவயதுத் திருமணம்

### சிறுவயதுத் திருமணம்வாழ்வை நரகமாக்கும்

ந.பிரயுசா. வட்டுக்கோட்டை.

இன்றைய நவீன யுகத்திலே தளம் அதிகம் சமூகத்தில் எதிர்நோக்கக் கூடிய ஒரு பிரச்சனையாக சிறுவயதுத் திருமணம் காணப்படுகின்றது. இந்த சிறுவயது திருமணமணமானது ஒரு தனிப்பட்ட குடும்பத்தில் மாத்திரமல்லாது ஒரு பரந்து பட்ட சமூகத்திலேயும் பாரிய விளைவை உண்டு செய்வதை நாம் கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது.

அதாவது நம் சமுதாயத்திலே இத்திருமணத்தில் அதிகம் ஈடுபடுபவர்களாக பாடசாலை மாணவர்களே காணப்படுகின்றனர். இவர்கள் தமக்கு ஏற்படும் தனிப்பட்ட ஆசையின் காரணமாக தம்மையும், தம்மை நம்பியுள்ள , சுற்றியுள்ள அனைவரையும் கண்கலங்க வைத்து அவமானத்திற்குள்ளாக்கிச் செல்கின்றனர்.

தற்போது இன்றைய உலகில் தொழில்நுட்பத்தால் எவ்வளவு பெரிய அறிவுமாற்றம் வந்தாலும் இந்த இளவயது திருமணமானது குறைந்ததாக நம்மால் காண முடியவில்லை. நன்றாகப் படிக்கின்ற நம்பிக்கை நட்சத்திரமாக காணப்படும் எத்தனையோ மாணவர்கள், சிறுவர்கள் சிறுவயது திருமணத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்த திருமணமானது சிலவேளைகளில் குடும்ப உறுப்பினர்களின் உயிரைப் பறிக்கவும் காரணமாக அமைகின்றது. உதாரணமாக ஒரு குடும்பத்தில் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் இந்த சிறுவயதுத் திருமணத்தில் ஈடுபடும்போது அக்குடும்பம் வேதனைக்கு உள்ளாகி உயிரை விடும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

இந்த இளவயதுத் திருமணமானது படிக்கின்ற மாணவர்கள் தாமாக விருப்பப்பட்டு செய்யும் சூழ்நிலையில் சில சமூகங்களில் கடைப்பிடித்து வரும் பழக்கங்களால் சிறுவர்களை அடிமைப்படுத்தி கட்டாய திருமணம் செய்து வைக்கும் நிலை காணப்படுகின்றது.

சிலர் தமது வறுமைக்காகவும்ஈ மேலும் சிலர் தமது மன ஆசைக்காகவும், படிக்கின்ற மாணவர்களை, வயதுக்கு வராத சிறுவர்களை சிறுவயது திருமணத்திற்கு கட்டாயப் படுத்துகிறார்கள். இதனால் மனமுடைந்துபோகும் பிள்ளைகள் தற்கொலைக்கு தூண்டப்படுன்றனர்.

எவ்வாறு இருந்தாலும் இந்த சிறு வயது திருமணமானது தடுக்கப்பட வேண்டும்.

## போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டு வருபவர்கள் இளைஞர்களா? சிறுவர்களா?

பிறேமநாத் தர்சிகா
வேலணை மத்தியகல்லூரி



போதைப்பொருள் பாவனை அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. இதில் சிறியவர்கள் தொடக்கம் பெரியோர்கள் வரை அடிமைப்பட்டுக் காணப்படுகின்றனர். சிறுவர்களுக்கு இன்றைய உலகில் போதைப்பொருளுக்கு அடிமைப்படுத்தும் இடமாக பாடசாலை மாறி வருகின்றது. இதனால் சிறுவர்கள் வந்து அதிகமான பிரச்சினைக்கு உட்பட்டு வருகின்றார்கள். போதைப்பொருள் வேண்டுவதற்கு பணம் தேவைப்படுகின்றது. இதனால் சிறுவர் மற்றும் இளைஞர்கள் பணத்தை பெறுவதற்கு களவு எடுத்தல், வேலைக்கு போதல் போன்றவற்றின் மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.. இதனால் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைகின்றன.

## போதைக்கு அடிமையாகும் பேதைகள்

விசுவலிங்கம் ஜெசிந்தா
வேலணை மத்தியகல்லூரி



சிறுவயது மாணவர் முதல்
பதும வயது இளைஞர் வரை
வேரோடிக் காணப்படுவது
போதைப்பொருள் அடிமைக்கே
சிறுவர் துஷ்பிரயோகம் முதல்
களவு, கொள்ளை வரை
மானிடரைத் தூண்டுவதும்
இந்தப் போதைப் பொருட்களே
இதையறியாத மானிடராய்
மண்ணில் பலர் மாள்கின்றனர்
போதைப்பொருள் பாவனைதனில்
நாளும் ஊறி ஊறி வாழ்வைத்
தொலைப்பவர்கள் நாளும் இங்கே பலர்
கஞ்சா என்று சொல்பவர் சிலர்
அபின் என்று சொல்பவர் சிலர்
இரண்டில் சிறந்தது எனப்போட்டி
போட்டுக் கொள்பவர் பலர்
இரண்டுமே தீமையென
உணர்ந்து கொள்பவர் யாருமில்லை
இதை அறிந்துணர்ந்த மனிதர் பலர்
மண்ணில் நல்ல வண்ணம் வாழலாமே...

## பணம் கொடுத்து வாங்க முடியாதது எது?

சி.அஜந்தா, மானிப்பாய்

ஓர் அழகிய சின்னக் கிராமம் உலகிலே பெயர் வந்த பெரிய கோயிலின் அம்மன் துணை கொண்டு அக்கிராமம் செல்வமும், செழிப்புமாக கவர்ச்சியாகக் காணப்பட்டது. அப்புகழ் மிக்க கோயிலின் பெயர் தான் சுதுமலை ஶ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோயில். இவ்வாறு அழகாக வளர்ந்து வந்த கிராமம் இடைக்கால வளர்ச்சியில் ஒரு சில மனிதனின் சீர்கேடான பழக்க வழக்கங்களிற்கும், பொருளாதார நெருக்கடிக்கும் அடிமையாகிற்று.

அன்று ஒரு காலம் வளமும் செல்வமும் பக்தி பரவசத்துடனும் தனது இல்லற வாழ்க்கையை நடத்திய அன்னலக்சுமியின் கதை தான் இன்ற அந்தக் கிராமம் முழுதும் பெரிதும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. பணம், பணம், பணம், பணம் இருந்தால் தான் வாழ்க்கை பணமில்லை என்றால் வாழ்க்கையும் இல்லையா? சொந்த உழைப்பில் வாழ்பவன் மனிதன் பிறர் உழைப்பை சுரண்டி வாழ்பவன் மனித உருவில் பிறந்த மிருகம் என்ற தான் சொல்லலாம்.

அன்று செல்வமாக வாழ்ந்த அன்னம் மற்றவரின் பரிதாப நிலையைக் கண்டு கடன் கேட்டு வந்தவர்களுக்கு எல்லாருக்கும் உதவி செய்தவள்தான் இன்று தன்னுயிரையும் இழநது நிற்கின்றாள். வட்டி தருவதாகக் கூறி ஒரு தொகைப் பணத்தை வாங்கி மூன்று மாத வட்டி கொடுத்த படி பின் வட்டி கொடுக்காது அன்னத்திற்கு செய்வினை செய்து விட்டார்கள். அந்தப் பணத்தை திருப்பிக் கேட்காத படி செய்து விட்டார்கள். அன்னம் இப்போது தன் வீட்டையும் இழந்து நடுத்தெருவில் நிற்கின்றாள்.

பணம் உதவி செய்த அன்னம் இன்று வீட்டை விட்டு வெளியேயும் போகாமல் செய்யப் பண்ணியது பணம். இவ்வாறு வாழ்ந்த அன்னம் யோசனையே அவளைப் பைத்தியமாக்கி உயிரை எடுத்தது. இன்று அவளின் பிள்ளைகள் தனிமையாக்கப்பட்ட நிலையில் பணம் கொடுத்து அம்மாவை வாங்கலாமா? என்று புலம்பிய வாறு இருக்கின்றனர்.

## விவசாயம்

பாமேஸ்வரன் நிரோஜினி
கனகரத்தினம் ம.வி



சேற்று வயல்
உழக்கியவன்
சோற்றுருண்டை
கண்டதில்லை

மூத்தவன் முதலாளி வர்க்கம் பல
ஏழை விவசாயி வாழ்வு கண்டு
ஏளனமாய் நகைப்பது ஏனோ?

உடல் பிழிந்து உழைப்பவனாம் விவசாயி
குடல் காய்ந்து இறக்கின்றான்
விவசாயி அவன்!
தாய், சேய், பிள்ளையும் நோய்வாய்ப்படுகையிலே
பாண் கூடத் துணையில்லை !

சிறு துண்டு உடையிலே
வேர்வை வாசம் வெகுமதியாய்
கச்சை என்று அதனையே
கேலி செய்யும் கலியுகம்!

விவசாயி மகன் நான் என்று
பிள்ளையதுவும் சொல்ல
வெட்கம் எனும் வேடம் பூண்டு
வெகுளியாகி வாழுதே!

என்று இந்த ஏக்கமெல்லாம்
மாற்றம் என்னும் சாதனை கண்டு
புதுத் தோற்றம் பெற்று வாழ்ந்திடுமோ?

## இதற்காகவா நீ பிறந்தாய்

க.திருவம்பலம், நெய்தல் மகன்

கூடவும், குடிக்கவும், கும்மாளம் போடவும்,
ஆடவும், பாடவும்
ஆகாதவன் ஊரார் உரைக்கவும்
சந்தி சிரிக்கவும் சனங்களுனைப் பேசவும்
குந்தியிருந்து நி குரங்காட்டம் ஆடவும் பேசவும்
தேங்காய் பிடுங்கவும், மாங்காய் பிடுங்கவும்
கோழி பிடிக்கவும், கொன்றதனை உண்ணவும்
ஆகாதவன் என்று அயல் வீட்டான் பேசவும்
காவல்துறை சென்று காலத்தை வீணாக்கவும்
இதற்காகவா நி பிறந்தாய் நண்பா

புதியதொரு காரியத்தைப் புகுத்துகிறேன் கேள் நண்பா
புரிந்துணர்வு இல்லான் வாழ்க்கை
போர்க்களம் தான் நாள் முழுவதும்
சற்று நி அமர்ந்திருந்து சரியாகச் சிந்தனை செய்
அதன் பிறகு அம்மாவின் காலில் விழு
பார்முழுதும் மனித குலப் பண்புதனை விதைத்து விடு
கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியின் தத்துவம் பார்
வீரம் விலை போகாது விவேகம் துணைக்கு வராவிட்டால்
தீட்டிய வாளும் தினவெடுத்த தோள்களிலே
தூக்கிய ஈட்டியும் போதாது நண்பா
இதோ நான் தரும் அறிவாயுதத்தை எடுத்துக் கொள்

பல்சமயக் கருத்தாடல் நிலையத்தின்
யாழ்கிளையில்
அங்கத்தவர்களாக விரும்புவோர்
பல்சமய, சமூக சேவையில்
ஈடுபடுவோர் விண்ணப்பிக்கலாம்
ராகஸ்வரம் கலைமன்றம்
28/1, ஏ.வி வீதி, கொழும்புத்துறை.

# ஜோதிட விஞ்ஞானம்

ஜோதிர்வித்யாரத்னா V.A சிவராசா B.A,BPhil, Dip.in.Edu
56, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 8708

## திருமணக்கிரியைகள்




01) விவாகம் என்பதற்கு "சுமப்பது" எனப் பொருள்படும். மனைவிக்குத் துன்பம் நேராவண்ணம் காப்பது எனப் பொருள்படும்.

02) வாக்தானம் – மணப் பெண்ணைப் பார்த்து தர்மத்தைச் செய்வதற்காக

03) நிச்சயதார்த்தம் – திருமணத்தை நிச்சயித்து விட்டு பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று தாம்பூலம் மாற்றுவது நிச்சயதார்த்தம் எனப்படும்.

04) மாங்கலியம் (தாலி) செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில் அல்லது ஆசாரியார்வீட்டில் பொன்னுருக்கல் செய்யப்படும்.

05) மணமக்கள் வீட்டில் தனித்தனியே வடகிழக்கு மூலையில் முகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். கன்னிக்காலுக்கு முள்முருங்கை மரமே பயன்படுத்த வேண்டும்.

06) அங்குரார்ப்பணம் – எனப்படுவது நவதானிய முளையிடுதல் ஆகும். இதன் பொருள் தம்பதிகள் செழிப்பாக வாழ வேண்டும் என்பதேயாகும்.

07) காப்புக்கட்டு – எனப்படும் இரட்சாபந்தனம் என்பதன் பொருள் எடுத்த கருமங்கள் இடையூறின்றி நிறைவேறுதலாகும்.

08) குடும்ப வாழ்வு தவறின்றி நடப்பதற்கு "பிதுரர்" ஆசீர்வாதம் வேண்டப்படும்.

09) கன்னிகாதானம் – மணமகளின் பிதா மணமகனுக்குப் பெண்ணைக் கொடுத்தலாகும். இதற்கு தாராதத்தம் என்றும் அழைப்பர்.

10) தாலி என்ற சமஸ்கிருதச் சொல் பனை மரத்தைக் குறிக்கும். "தாலி" என்பது பனையோலையைக் குறிக்கும். பழைய காலத்தில் சங்கத்திற்குப் பதிலாக பனைஓலையைப் பயன்படுத்தினர். ஆதிகாலத்தில் மஞ்சள் கயிற்றினாலே தான் தாலி கட்டப்பட்டு வந்தது.

11) தாலி கட்டும்போது அமங்கல வார்த்தைகள் தும்மல் போன்றன துர்சகுன ஒலிகள் கேட்கக் கூடாது என்பதற்காகக் கெட்டிமேளம் கொட்டப்படும்.

12) தாலிகட்டும்போது கூறப்படும் மந்திரத்தின் தமிழாக்கம் – "யான் கட்டும் தாலி நான் வாழ்வதற்கு ஏதுவானது. இதை உன் கழுத்தில் கட்டுகிறேன் சௌபாக்கியவதி யாக நீ நூறு வருடங்கள் சுகமாக வாழ்ந்திருப்பாயாக.

13) மாங்கல்யம் ஒன்பது இழைகளைக் கொண்டது
1) வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொண்டது.
2) ஆற்றல்
3) தெய்வீக நோக்கம்
4) விவேகம்
5) தொண்டு
6) மேன்மை
7) தூய்மை
8) உத்தம குணங்கள்
9) தன்னடக்கம்

14) தாலியில் மூன்று முடிச்சுக்கள் இடம்பெறும்
1) கணவனுக்குக் கட்டுப்பட்டவன்
2) கணவனின் பெற்றோருக்குக் கட்டுப்பட்டவன்
3) தெய்வத்திற்குக் கட்டுப்பட்டவன்

15) மாலை மாற்றுதல் – வாழ்க்கையில் உடலாலும், உள்ளத்தாலும் நாமிருவரும் ஒருவரே என்ற கருத்துப் பட மூன்று முறை மாலை மாற்றுதல்

16) பாணிக்கிரகணம் பிடித்தல்
நீயும் நானும் முதுமையடைந்து விட்டதலும் கூட ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருப்போம் என்று உன் கையைப் பிடிக்கின்றேன்.

17) ஏழடி நடத்தல்
1) கடவுளுக்காக
2) கணவனுக்காக
3) சேர்ந்தோர் குலத்தைக் காக்க
4) அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணநலன்களைப் பேண
5) இருவரது அறிவு நல்வழியாக அமைய
6) கலைகள் யாவும் கணவனுக்குப் பொருந்தும் வரை ஊட்ட
7) ஏழேழு பிறப்பும் கணவருடன் இன்புற்று வாழ

18) அம்மி மிதித்தல் – கற்பையும், ஒழுக்கத்தையும் உறுதி போல் பேணிக் காப்பதற்கு

19) மெட்டி அணிதல் – தீய ஆவிகள் மணமகளைத் தீண்டாதிருத்தல்

20) மோதிரம் போட்டு எடுத்தல் – மணமக்களுக்கு கூச்சம் தெளியவும், ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்கவும்

21) முள்முருக்கு நடப்படுதல் – கற்புநெறி தவறாமல் வாழவேண்டும் என்பதற்காக

22) வாழ்த்துதல் – அறுகைச்சேர்த்து மஞ்சள் கலந்த அரிசியுடன் உச்சியில் மூன்றுமுறை இடுதல்.

23) திருமண நிகழ்வின் நிறைவாக "ஆரத்தி" எடுத்தல் நிகழும்.

---

# சோதிடத்தில்...

# பொறுக்கிய முத்துக்கள்

01) 03/12/ 30 ஆகிய திகதிகளில் மழலை பிறந்தால் பிதாவுக்குக் கஸ்ரகாலம் ஆரம்பிக்கும்.12ம் திகதி எனின் பொருளாதாரச் சரிவும் சில சமயம் கண்டமும் நேரிடலாம்.

02) எந்தத் திகதியில் பிறந்திருக்கும் குழந்தைகளுக்கு ஆண்டு மாதம் வருடத்தைக் கூட்ட வரும் கூட்டெண் 8 எனின் 5ம் எண்ணிலேயே பெயரை வைத்தல் மிகமிக அவசியம்.

03) இயன்றவரை **D** என்ற ஆங்கில எழுத்து **L** என்ற தமிழ் எழுத்து வரிசைகள் பெயரில் வராதிருத்தல் நலம் பயக்கும்.

04) 32 எண் உயர்வையும் தாழ்வினையும் மாறி மாறி ஏற்படுத்துமாகையால் கையொப்பம்/பெயர்/ வியாபாரநிலையப் பெயர்கள் இந்த எண்ணில் அமைவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

05) அதிர்ஷ்ட எண்ணுக்குப் பெயரினை மாற்றிக் கொண்டவர்கள் தினமும் தமது பெயரை எந்த எண்ணின் தொகையில் இருக்கின்றதோ (உதாரணமாக 23 எனின்) 23 தரம் வைத்து 108 நாட்களுக்கு வைத்து வர அதிஷ்ட சக்தி பிரவாகமெடுக்கும்.

06) எட்டாம் எண்ணை எழுதும் தொடர்ந்து எழுதாமல் மேலும் கீழும் இரண்டு வட்டங்களை அமைத்து எழுதுங்கள். இதனால் சனீஸ்வரனின் கெடுதல் நீங்கும்.

07) உங்கள் கையெழுத்து நேர்கோட்டில் அமையாது முப்பது பாகையாவது உயர்ந்து செல்லும் நிலைப்பாட்டில் வைத்து வருதல் அதிர்ஷ்டம் தரும்.

08) 29ம் திகதிகளில் பிறக்கும் பெண்கள் கணவன்மாரை நீதிமன்றத்திற்கு அழைப்பார்கள்.

09) புதிய காரியங்கள் தொடங்க முற்படுகையில் 28ம் திகதியைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

10) இரத்தினங்களை ஆபரணங்களில் வைக்கும்போது உடலின் தோலுடன் முட்டுவது அவசியம்.

11) நித்திரை மேற்கொள்ளும் வேளையில் தலை கிழக்குத் திசை நோக்கி இருத்தல் அதிஷ்டகரமான வாழ்வு அமையும்.

12) தாயறை (சாமி அறை)யில் நின்று பார்க்கும்போது குசினியின் அடுப்பு வெளிச்சம் தெரிவது நலம் விளையும்.

13) இயன்றவரை மாற்றுச் சம்பந்தம் புரிவதைக் கைவிடுங்கள்.

14) எட்டில் செவ்வாய் இருப்பவர்கள் ஆயுட்பலமான வர்களையே திருமண பந்தத்தில் இணைத்க் கொள்ளுங்கள்.

15) பிறர் பிள்ளையைக் கையேற்கும் தத்துப் புத்திரயோகம் அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும்.

16) பிறக்கும் பிள்ளைகள் தொடர்ந்து நோய் நொடிகளால் பாதிக்கப்படின் (அரிஷ்டபிரதோஷம்) பிறருக்கு விற்று வாங்கவும்.

17) ஆண்பெண் நட்சத்திரங்கள் ஒரே ரச்சில் இருப்பின் அம்மன் தாலி/புறாத்தாலி கட்டுவது அவசியம்.

18) செவ்வாய் தோஷம் சிலகாரணங்களினால் கெடுதி தராது என்பதை திருக்கணித பஞ்சாங்க மூலம்/ சோதிடர்களைச் சந்தித்து அறிந்து கொள்ளலாம்.

19) வாஸ்து முறைப்படி அமைக்கும் புதிய மனைகள் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வை ஏற்படுத்தும்.

20) விவாகம் புரியும்போது ஜாதகப் பொருத்தத்துடன் எண் பொருத்தமும் அமைவது சிறப்பைத் தரும்.

21) 9ம் எண்ணில் (9/18/27) பிறப்போருக்கு விபத்துக் களினால் காயங்கள் மற்றும் பிற காரணங்களி னால் தேகத்தில் வடுக்கள் ஏற்படுவது சகஜமாகும்.

22) கோசர நிலையில் வியாழன் 2/5/7/9/11ம் இடங்களுக்கு வரும்போது நன்மைப்பலாபலன்கள் ஏற்படும். சனீஸ்வரன் இராகு, கேதுஎன்பனவும் 3/6/11ல் வர கெடுபலன்கள் குறைந்து விடும்.

23) ஏழரைச்சனி மங்கு/ மரணச்சனியாக இருப்பின் கஸ்டங்களையும் பொங்கு சனி என்றால் அதிஷ்டத் தையும் ஏற்படுத்தும்.

24) பூரணைச் சந்திரன் (வளர்பிறை) காலத்தில் பலவீனமுள்ளவர்களின் உளம் பாதிக்கப்பட்டுப் பிறரைப் பழிவாங்க முயற்சிப்பார்.

25) பெயரெண் 47ல் அமையின் மருத்துவ சிகிச்சை பலனளிக்காமல் அவதியுறுவதுடன் சிலர் கண் பார்வையை இழக்கின்றனர்.

26) பகை யோனிகளைத் தவிர்க்குக
குதிரை–எருமை/யானை–சிங்கம்
மான் –நாய்/ எலி–பூனை மாடு–புலி

27) ஆணுக்கும் பெண்ணுக்கும் கிரகபாலம் 16வரை குறையலாம்/கூடலாம்.

28) குழந்தைப் பலன் விருத்தியடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவருக்காவது பால் உள்ள விருட்சமாவது இருத்தல் நன்று.

# சமூக, சமயப்பணிகளில்

## நாம் பங்காளரா? பார்வையாளரா?

எல்லா நாடுகளும் சோகத்தில் இலங்கையிலா இத்தனை கொடூர நிகழ்வு "உயிர்ப்பு ஞாயிறு" கத்தோலிக்க மக்களின் முக்கிய நாளாகும். கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் கிறிஸ்தவம் உண்மையற்றதாகும். அதன் விசுவாசம் நம்பிக்கை விடுதலையைக் கொண்டாடும் விழாவில் 250க்கு மேற்பட்ட கொலைகளும்500க்கு மேற்பட்ட காயப் பட்டோரையும்,வெளிநாட்டு பிரஜைகள் 35பேரை இழந்த நிலையில் தமிழரை குறி வைத்ததன் நோக்கம் என்? நிராயுதபாணிகளாக ஆன்மீகத் தேடலை நாடிச் சென்ற பக்தர்கள் ஆலயத்துள் வைத்து கொலை செய்யப் பட்டதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். சமயவாதிகளால் ஊட்டப்பட்ட மனித மாண்பை இழக்கும் நிலைக்கு யார் காரணம்?

கண்ணீருடன் கண்டனங்கள்,வழிபாடுகள் இழந்த இழப்புக்களை சாந்திப்படுத்துமா? அதனைக் கூட பல குழுக்களாகப் பிரிந்து நின்று தமது கடமைகள் முடிந்து விட்டது என அறிக்கைகளும், அனுதாபக் கூட்டங்களும் அவர்களின் துயரத்திற்கு போதுமானதா? இதனைச் செய்வோர் நல் உள்ளங்களாக நல்ல சிந்தனைகளைப் பகிர்ந்தாலும் இவை மேல்மட்ட குரலாகத் தம்மை ஆற்றுப்படுத்தும் செயலாக கொண்டாலும் இதன் பின் விளைவுகளைப் பற்றிய திட்டமிடல் மிகக் காத்திரமானதாக இருக்க வேண்டியது காலத்தின் தேவையல்லவா?

இழந்த உயிர் உறவுகளும் காயப்பட்டு உடல் ஊனமாக்கப் பட்டதால் ஏற்பட்ட குடும்பங்களுக்கும், சீரழிவுகளுக்கும் யார் பொறுப்புக் கூற முடியும்? ஆன்மீகத் தலைமைகளும் , அரசியல் தலைமைகளும் அனுதாப உரைகளைத் தாண்டி ஒருவர் மற்றவர்கள் மேல் பழி சுமத்தி தப்பிப்பதை விடுத்து உடன் செயல்பட வேண்டியவை பற்றிச் சிந்தித்து செயல்பட தூரநோக்கான திட்டமிடல் தான் முக்கிய தேவையாகும்.

இவ்விடயத்தை வைத்தே அரசியல் லாபம் தேடும் அதிகார வெறி பிடித்தோர் மட்டில் அவதானம் தேவை. ஆன்மீகத் தத்துவங்களைப் பேசி தமது மதத்தை பிரசாரப்படுத்தும் அசிங்கமான செயல்களில் ஈடுபடும் ஆன்மீக வெறியர்களை இனம் கண்டு களைதலும் முக்கியமாகும். பயப்பிராந்தியுடன் வாழும் சகசமூகங்களின் மனங்களிலும் வாழ்வியலிலும் சுபீட்சமடைய நல்லுறவுப்பணிகள் மட்டுமல்ல. சிறுவர்கள், இளையோரின் மன வெறுப்புக்கள், தன்னம்பிக்கையற்ற தவறான பாதையை நாடிச் செல்லும் நிலைகளை உணர்ந்து செயல்பட ஆலயங்கள், கோவில்கள், பள்ளிவாசல்கள், விகாரைகள் சிறுவர், இளையோருக்கான வழிகாட்டலை கடமைக்காக செயல்படுத்துவதை விடுத்து தூய்மையான மகிழ்வின் பிறமத தலைமைகளையும் உணரும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்த முன்வரும் முன்நகர்வை மேற்கொள்ள திட்டமிட்டு செயல்பட வேண்டியதும் இக்காலத் தேவையாகும்.

ஆன்மீக பக்தர்கள் மட்டிலும் சகல சமயங்களிலும் பக்தர்களாக இருப்போரில் தீவிரவாதம், அதிதீவிரவாதம் எனத் தூண்டிவிட்டதால் ஏற்பட்ட விளைவுகள் பல பிரிவினைகளை, பிளவுகளை அதனால் பெரும் பாரிய இழப்புக்களை எதிர் கொண்டதை அனுபவத்தில் கண்டதை உணரும் மனப்பக்குவம் மதத் தலைமைகளிடம் உண்டு. அதனை நெறிப்படுத்துவதைக் கையாள்வது மிக முக்கியமானதாகும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் பயிற்சிச் சாலைகள் , ஆசிரியர்கள் தமது பொறுப்புக்கள், கடமைகளை பிறமத நல்லுறவை, நல்ல சிந்தனைகளை வழிப்படுத்துவதில் முன்மாதிரிகளை வெளிப்படுத்துவதிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் முன்னைய காலங்களை விட சற்று விவேகமாகவும், வினைத்திறனுடனும் கையாள முனைதல் முக்கியமாகும். மகிழ்வான சூழலில் மனம் திறந்து பேசும் மனப்பக்குவத்தில் மாணவர்கள் ரசனைப் பண்பை மேம்படுத்த இசை மூலம், நாடக, ஓவியக் கலை வடிவங்களால் திறமைகளைப் பயன்படுத்த சந்தர்ப்பங்களை உருவாக்கி உருவாக வேண்டும். நான்கு மதங்கள் பற்றிய நற்கருத்துக்களை தேடிக் கற்று வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை மாணவர்களிடம் தூண்டப்பட்டால் பிறமத விழாக்களின் அர்த்தங்களை பிறமதத்தினருடன் கலந்துரையாடி வெளிப்படுத்த வைப்பதன் மூலமும் குரோத மனப்பான்மை மறைவதுடன் பிறமத நண்பர்கள் உறவு பலமடையத் தூண்டும் வழியாக அமையும்.

வகுப்பறைக்கு அப்பால் வாழ்வியலின் ரசனைப் பண்பையும் நல்ல வன்முறையற்ற தொடர்பாடல் வழிகளையும், வாழ்வியலில் கற்றுக் கொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவது அனுபவக் கல்வியாக அமையும். இழப்புக்களைச் சுமந்தவர்களின் துயர் பற்றிய ஆறுதல் வார்த்தைகள், எண்ணப்பகிர்வுகள் மூலம் இரக்க சுபாவம், துயர் பகிரும் மனப்பக்குவம் வளர வாய்ப்புக்கள் ஏற்படும். இதனை சமூக மட்ட சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், பொது அமைப்புக்கள் தமது பகுதிகளில் முன்னெடுப்பதால் தூரநோக்கான அமைதியான மனித மாண்பைக் கட்டியெழுப்பும் கரங்களாக ஒன்றிணையவேண்டியது காலத்தின் தேவையாகும்.

---

# எங்கும் எதிலும்

எமது நாட்டினை கைலஞ்சப் பிடியினால் பாதுகாக்க முனைந்ததன் விளைவுகளே தற்போது அனுபவிக்கும் பதவிப் போட்டியாகி விட்டது. கட்சி மாறினால் மந்திரிப்பதவி, இலாக்கா ஒவ்வாத அமைச்சு என 100மந்திரிகள் , உதவி, பிரதி இராஜாங்க அமைச்சுகள் அதற்கு உதவியாளர்கள், செயலாளர்கள், பாதுகாப்புப் படைகள் எனக் கதிரைகள் தாங்காத பதவிகள் லஞ்சத்தால் பெருகி வீதிகள் முதல் நிறுவனங்கள் வரை புரையோடிய லஞ்சத்தால் பாமர மக்கள் படும் துயர் அதிகம். அரச நம்பகத்தன்மை கேள்விக் குறியானதால் ஏற்பட்ட விளைவுகளே இன்றைய சுற்றி வளைப்புக்கள் காட்டிக் கொடுக்கின்றன.

இத்தனை மேல் மட்டத்தின் கண்ணில் மண்ணைத் தூவிய அமைப்புக்கள் நாடு பூராவும் பயிற்சி முகாம்களா கவும், தற்கொலையாளிகளாகவும் வளர விட்டு சாதாரண மக்களைத் துன்பியல் கைதுகளாலும், விசாரணையின்றிய தடுத்து வைப்புக்களாலும் உண்மைகள் மாற்றப்பட்டதை வெளிப்படுத்தும் ஒரு சம்பவமே வவுணதீவு இரு காவலதி காரிகள் கொலைக்காக கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி கைதாகியுள்ள சான்றுகள் இன்று யாரிடம் உள்ளது? உண்மையான போதை வியாபாரிகள், வாள் வெட்டுக் குழுவினர் பாதுகாப்பாக நடமாடவும், நமது மக்கள் பதட்டத்துடன், பயத்துடன் கலங்கிய மக்களாகி குமுறுகிறார்கள். அரச இயந்திரமோ தூங்கி வழிகிறது. அபிவிருத்தி என்பதெல்லாம் ஆமை வேகமாகிவிட்டது.

---

# ஊருக்குத் தான் உபதேசமா?

நாட்டில் நடைபெறும் பெருவிழாக்களுகான வாழ்த்துரைகளில் நமது நாட்டுத் தலைவர்கள் கூறுவது புரிந்துணர்வுடன், பகைமையை மறந்து, ஒற்றுமையுடன், சமாதானமாக, எதிரியையும் நண்பர்களாக ஏற்று வாழுங்கள்.

பேதங்களை விடுத்து, நாட்டுக்காக அர்ப்பணிப்போடு முன்மாதிரியாக வாழ்ந்து நாட்டைக் கட்டியெழுப்புங்கள் என்பதெல்லாம் அரசியல் தலைவர்கள் கூறினாலும் அவை மக்களுக்கு மட்டும் தான் தமது முன்மாதிரியான செயல்பாடுகளில் அல்ல, இதுவே எமது நாடு சீர் கெட்டுச் சின்னாபின்னமாவதற்கு காரணமாகும் இவை வாடிக்கையும், வேடிக்கையுமான வாழ்த்துக்கள் தானே.

---

# ஊடகப் பயிற்சிப் பட்டறை

**ராகஸ்வரம் கலைமன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்துத் துறை மற்றும் ஊடக ஒளிப்படத்துறையில் பிரகாசிக்க விரும்புவோருக்கான இலவச பயிற்சிப் பட்டறைகள் துறை சார்ந்தவர்களால் நடாத்தப்படவுள்ளது.**

**இதில் பயன் பெற விரும்புவோர்**

**0762963944**

**எனும் இலக்கத்துடன்**

**தொடர்பு கொண்டு மேலதிக விளம்பரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்,**

**அல்லது**

**ராகஸ்வரம் கலைமன்றம்**

**28/1, ஏ.வி வீதி,**

**கொழும்புத்துறை.**

**எனும் முகவரிக்கு விண்ணப்பிக்க முடியும் என மேற்படி மன்றத் தலைவர் திருமதி ஜெமல்டா ஜெபரட்ணதாஸ் தெரிவித்துள்ளார்.**

---

யாழ் களரி
Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

# பயங்கரவாதிகளின் பயணம்

அவர்கள் படித்தவர்கள், செல்வந்தர்கள், நல்ல குடும்பப் பின்னணியைக் கொண்டவர்கள்: அவர்கள் எப்படித் தமது உயிரையும் அப்பாவி மக்களது உயிரையும் பலியாக்கிய தற்கொலைக்குண்டுதாரிகளானார்கள்...?

சற்று தூண்டிவிட்டால் இயற்கையாக மனிதனிடமிருக்கும் தீவிர இயல்பு அழிப்பு கவலையில் ஈடுபடும் என்பது என்பது ஜன்ஸ்மனின் கருத்து இதற்கமைவாக,

ஒருவரை பிரத்தியேகமான சூழலிற்குக் கொண்டு வந்து ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பக் கூறி அதை ஞாபகப்படுத்தும் புலக்காட்சிகளையும் காண்பிக்கின்ற போது கூறிவிட்ட விடயம் நம்பிக்கையாக மாற்றிவிடலாம் இதுவே உளவியற் பொறியாகும். இஸ்லாத்தின் பெயரால் இயங்கி வரும் சர்வதேசப் பயங்கரவாதம் ஐ எஸ்ஜ எஸ் மேற்படி பொறியைக் கவனமாக கையாள்வதில் வல்லவரானார்கள். "காபிர்களை எதிர்த்துப் போரிடுங்கள்" என்று அல்குர்ரான் வசனம் முஸ்லிம் அல்லாதவர்களைக் கொல்லுமாறு கூறப்பட்டுள்ளது. ஆகவே முஸ்லிம் அல்லாத ஒருவர் "காபிர்" என்பதை ஏற்கும் மனநிலையில் உள்ள முஸ்லிம் ஒருவரையே மூளைச்சலவை செய்கிறார்கள். இது இறை வேதம், இதில் பிழைகளோதவறுகளோ இருக்க முடியாது என்று கருதும் முஸ்லிம்களுக்கு அவர்களையும் காபீர்களாக மாற்றிவிடும் வேலையைத் தான் கனகச்சித மாக செய்துவருகிறது இந்த ஐஸ்ஐஸ். இவர்களின் மூலோபாயம் என்னவென்றால் "காபிர்" குறித்து நடுநிலைக் கருத்தைக் கொண்டிருப்பவர்களை ஆர்வ மனநிலைக்கும் ஆர்வநிலையில் இருப்பவர்களை தீவிர நிலைக்கும், தீவிர நிலையிலிருப்போரை பயங்கர வா்த நிலைக்கும் கொண்டுவருவதில் வெற்றி பெறும் போது முஸ்லிம் வாலிபர்கள் பலிகடாவாகின்றனர்!

ஐ எஸ் ஐ எஸ் பயங்கர சேனைக்கு ஆட்சேர்க் கும் போது இந்தக் பலிக்கடாவானவர்களைக் கொண்டு முதலில் ஒரு பெயரில் அமைப்பொன்றை உருவாக்கு வார்கள். மக்கள் மத்தியில் சேவையாற்றுவார்கள். அரசியல்வாதிகளுடன் நெருக்கமாகி அமைப்பைப் பதிவு செய்து நல்லவர்கள் போலவே தம்மைக் காட்டிக் கொள்வார்கள். இரண்டாவதாக தீவிரமான கருத்துக்களைப் பேசுவார்கள். காபிர்களுக்கு எதிராக போராடும்படி தூண்டுகின்ற அல்குர்ரான் வசனங்களை பாமர மக்கள் மத்தியில் திரும்பத் திரும்ப நினைவு படுத்தி வெறுப்புணர்வை அவர்களுக்கு புகட்டுவார்கள்.மூன்றாவதாக முஸ்லிம்களிற்கு எதிராக உலகில் இடம் பெறும் பேரழிவுகள் வன்துமுறைகளை மீட்டிக் கூறுவது டன் காட்சிகளையும் காண்பிப்பார்கள். காபிர்களைக் கொல்லுகிற மனநிலையில் உள்ளவர்களைக் கொண்டு மாற்றுக் கருத்துடையோரை எதிர்க்கும் இயக்கமாக வளர்பவர்கள் இவர்களுக்கு சமூகத்தின் எதிர்ப்புக் காரணமாக தனிமைப் படுத்தப் பட்டு தமக்கெதிரான அனைவரையும் காபிர்கள் என்று கூறும் நிலைக்கு அவர்களைக் கொண்டு வருவார்கள். அடுத்த கட்டமாக தாக்குதல் நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்து போராட்டக் காட்சிகள் காண்பித்து கொலை செய்தல், கொலை செய்யப்படுதல் பற்றிய அச்ச உணர்வை நீக்கி உயிரைத் தியாகம் செய்வதன் மூலம் சுவர்க்கத்தை அடைய வேண்டும் என்ற பேராசையை ஏற்படுத்துவார்கள். தனது உயிர், உடைமைகள் அனைத்தும் தியாகம் செய்யத் தயாராகும் பயங்கரவாத மனநிலையில் கட்டளைக்காக காத்திருப்பர்! கட்டளை இடுபவர் மிகவும் உயர்மட்டத் தொடர்புள்ளவராக இருப்பார். உலக அரசியல் முதல் உள்நாட்டு அரசியல் போன்றதெனினும் பேரம் பேசும் பெரிய சக்தி வெளித் தெரியாத பல்வேறு நோக்கங்கள், பல பக்கங்களைக் கொண்டிருக்கும் கட்டளை இடுபவர் முஸ்லிம் பெயர்களைக் கொண்ட காபிர்களைக் கொல்வதா? அல்லது முஸ்லிம் அல்லாத பெயர்களைக் கொண்ட காபிர்களைக் கொல்வதா? என்று தீர்மானித்துக் கட்டளை இடுவார்கள்! கட்டளைகளை ஏற்பவர் காபிர்களை எதிர்த்துப் போரிடச் சென்றதால் இஸ்லாமியத் தீர்ப்பின் படி இவர்களும் காபிர்களாக மாறுகிறார்கள். ஆகவே இஸ்லாமிய மார்க்கத்தில் வன்மங்களைத் தூண்டுதல் தவிர்க்கப்பட வேண்டும். அத்துடன் "அன்பே சிவம்" என்ற இந்துக்களின் சேனை அடாவடிகளில் ஈடுபடுவதும், " ஒருகன்னத்தை அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டு" என்ற கிறிஸ்தவர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதும் அமைதியைப் போதிக்கின்ற புத்தரின் போதனைகளைப் புறந்தள்ளும் சேனைகள் அட்டூழியங்களில் ஈடுபடுவதும் தவிர்க்கப்பட வேண்டும். சக மனிதர்களிடம் அன்பு செலுத்தத் தவறுகின்ற எந்த வொரு மதமாக இருந்தாலும் அங்கேயும் பயங்கரவாதிகளின் பயணம் தொடராது இருப்பதற்கு மத வெறி மதப் பிடிப்புக்களிலிருந்து விடு பட்டு மனிதர்கள் என்ற நிலையில் ஒன்று படுவோமாக!

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 9

## உரிமை கேட்கும் உரிமை அற்ற தமிழர்கள் -10

பரமபுத்திரன்

அந்த நேரத்தில் கணணி பற்றி தெளிவாக தெரிந்த ஒருவர். கணணி இன்று போலல்ல அன்று. கணனியின் ஆரம்பகாலகட்டம். அன்றைய காலகட்டத்தில் கணனியை பயன்படுத்தி வேலைகள் செய்யும் ஆற்றல் உள்ளவர். அவர் இயங்கிய இயக்கம் மட்டுமல்ல, ஏனைய இயக்க தலைவர்களையும் நன்கு அறிந்தவர். அவர் விலகியதற்கு சொன்ன காரணம் இயக்கங்களின் செயற்பாடுகள் மக்களுக்காக அன்றி மக்களை வதைப்பதாக மாறிவிட்டது. இயக்கங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஒருமித்த கருத்துகளிலும் வேறுபட்ட கருத்துகளே அதிகம். ஏறத்தாழ ஒரே காலகட்டத்தினர் இயக்கங்களில் உள்ளனர் என்றபடியால் ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்தவோ, வழிப்படுத்தவோ முடியவில்லை. பலர் தேவையற்று கொல்லப்படுகின்றனர். ஆயுதம் ஏந்தியது மக்களை பாதுகாக்கவே தவிர பாதிக்கவல்ல. போராளிகள் மக்களுக்காக போராட வந்தவர்களே தவிர கருத்து முரண்பாட்டாலோ அல்லது தலைமைகளின் குழப்பநிலைகளுக்காக கொல்லப்பட அல்ல. என்னால் இயக்கத்துடன் ஒத்துபோகமுடியவில்லை. அதேவேளை மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியும் எனக்கில்லை. அதனால் விலகியதாக சொல்லவார். மிக நீண்ட நாட்கள், அதாவது எண்பதுகளின் மத்தியில் அவர் சொன்ன செய்தி. அதேவேளை அவர் சார்ந்த இயக்கத்தலைவர், அவரை புறப்பட அனுமதித்த போது "நீ இனி இலங்கையில் இருக்க வேண்டாம், வேறு எங்காவது செல்" என்று சொல்லியதால் இலங்கையில் இல்லை. அதேபோல அவர் எங்குள்ளார் என்றும் எனக்குத்தெரியாது.


இதை நான் சொல்லக்காரணம் ஈழவிடுதலைப்போராட்ட அமைப்புகள் சாதாரணமாக சொல்லும் நிலையில் மட்டும் இருக்கவில்லை. சிறந்த அறிவு நிறைந்த பயிற்சி என்பவற்றை கொண்டுதான் உருவாகின.

ஒருபுறம் விடுதலை அமைப்புகள் தொடர்பாக பார்க்கும் அதேவேளை, அன்றைய நிலையில் மக்களாட்சி என்று சொல்லப்படும் அரசியல் தலைவர்களும் அரசியல் அநாதைகள் என்ற நிலையிலேயே இருந்தனர். நான் இவைபற்றி தெளிவாக விளக்கக் காரணம் தமிழீழ விடுதலை இயக்கங்கள் நல்ல சிறப்பான ஒரு நிலையில் இருந்தும் தங்கள் இலக்கினை மறந்துவிட்டு தமக்குள் குழப்பங்களை உருவாக்கி கொண்டன



அல்லது குழப்பங்கள் உருவாக்க தூண்டப்பட்டன. இதனால் ஒற்றுமை சிதறி சண்டைகள் மூண்டன. ஈழத்தில் மக்கள் மத்தியில் பாதுகாப்பு உணர்வு ஏற்பட காரணமாயிருந்த அமைப்புகளே மக்களுக்கு துன்பமாக மாறின. எண்ணிக்கையில் அதிகமாக இருந்த இயக்கங்களை மக்களால் இனம் காண முடியவில்லை. எந்த இயக்கம் எதை செய்கின்றது என்றும் தெரியவில்லை. என்ன செய்வது என்றும் மக்களுக்கு புரியவில்லை என்றநிலை வந்தது. அதிக எண்ணிக்கையில் விடுதலை அமைப்புகள் இருந்தாலும் ஐந்து அமைப்புகளே பிரதானமாக பட்டியலிடப்பட்டன. அவை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (P.L.O.T), தமிழீழ விடுதலை இயக்கம்(T.E.L.O), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F) தமிழீழ விடுதலைப்புலிகள் (L.T.T.E), ஈழமக்கள் புரட்சிகர மாணவர் இயக்கம் (E.R.O.S). இதற்கும் மேலாக இன்னும் விடுதலைக்கு போராடுவதாக தம்மை அறிமுகப்படுத்திய இயக்கங்களுக்கு எதிராக மக்கள் போராடும் நிலையும் வந்தது.

(தொடரும்)



# பொறுப்புள்ளோரின் பொறுப்பற்ற வார்த்தை

சிமாக் உவைஸ், பேருவளை.

நான் பார்க்கவில்லை. நான் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை. எதுவுமே **எனக்குத் தெரியாது** என்ற வார்த்தைகள் குந்தியிருந்த குரங்கு நிலையில் எதுவித பொறுப்பும் இல்லாத பேச்சுக்கள் மூலம் பொறுப்புள்ள தலைமைகளின் பொறுப்பற்ற பேச்சுக்கள் செயல்களால் பொறுப்பின்றி தமது பட்டம் பதவிகளை சொகுசு வாழ்வைத் தக்க வைக்க இது மட்டுமல்ல இன்னும் பல செய்வார்கள். இவை குடும்ப அங்கத்தவர்களான மனைவி, மக்களிடமும் சொல்லிக் கொள்வார்களோ? நாமறியோம் பராபரனே.

இதனைத்தான் பாரிய அழிவுகளை தமக்குத் தெரியாது எனப் பிறர் மீது சுமத்தி தப்பிப்பது எமது நாட்டில் பொறுப்பு வாய்ந்தவர்களின் பொறுப்பற்ற செயலால் மக்கள் பாதுகாப்பு பொறுப்பற்றோர் கையில் சிக்கியதால் சீரழிகிறதே எமது நாடு.

# விடை காணமுடியா கேள்விகளா?

எரிகிற வீட்டில் புடுங்குவது தான் லாபம் என அரசியல்வாதிகளின் அறிக்கைகள் மட்டுமல்ல இரண்டு நாள் நாடாளுமன்ற விவாதத்திலும் அவர்கள் காட்டிய வாக்குவாதம் பிறர் மீது குற்றம் சுமத்துதல்கள் இத்தனை அழிவுக்குப் பின்னரும் மாறாத மனங்களாகத் தங்கள் பதவியை, தரத்தை மறந்து பேசிய வார்த்தைகள் நாடறியும். குண்டுத்தாக்குதலால் ஏற்பட்ட சேதங்கள் , உயிர்க்கொலைகளை விட இவை வராமல் தடுக்க பல சந்தர்ப்பங்கள், தகவல்கள் தந்தும் அலட்சியமாக இருந்த பயங்கரவாதிகளுக்கு துணை போன அதிகாரிகள், அரசியல்வாதிகளின் நிலைகளைப் பாதுகாக்கும் அரச இயந்திரம் இன்னும் எத்தனை தவறுகளைத் தண்டிக்காது பயங்கரவாதத்தைப் பாதுகாத்து பாமரமக்களை அழிக்கப் போகின்றது என்பதே மக்களின் துயர மனநிலையாக மாறி உள்ளது. எந்தத் தவறுகளையும் சுமத்த, சுமக்க தமிழர்கள் தான் சுமைதாங்கிகளா? வவுணதீவில் நடந்த காவல்துறையினரின் மரணத்துக்கு முன்னாள் போராளிகளில் குற்றம் சுமத்தி சுகம் கண்டவர்களை நாடறியும். இப்படி எத்தனைபேர் சிறையில் வாடுகிறார்கள். அவர்கள் விடுதலைக்குக் குரல் கொடுக்க யாரும் முன்வரமாட்டார்களா?இந்தக் குழப்பத்தால் போதை வியாபாரிகள் தப்பிக்க முன்நிற்கும் நிலையை இனம் காண்பவர் யார்? விசாரணைகள் இன்றித் தவிக்கும் சிறைக்கைதிகள் நிலை? காணாமல் போன உறவுகளின் குரலுக்கு விடை கிடைக்காமல் மறுக்கப்படுமா? தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பிறர் மீது சுமத்தும் பழிகள் எப்படி இனிவரும் காலத்தில் மறுக்கப்படும்? சிங்கப்பூரிலும், டுபாயிலும் சொகுசு வாழ்வு வாழ தேடப்படுவோராக மட்டும் பதிவாக்க உதவும் அரசியல்வாதிகளின் அடுத்த தேர்தல் கனவு தான் பயங்கரவாத செயல்கள் பற்றியஅலட்சியமானதா? விடை காண முடியாக் கேள்விகள் தொடராகிறது.

# திருத்தந்தையும் மன்னார் ஆயரும்

புகழ்நிலா

ரோமின் வத்திக்கானில் நடைபெற்ற ஒரு சம்பவம் உலகளாவிய ரீதியில் அதிகம் பேசப்படுகின்றது. பூமிப்பந்தில் கிறிஸ்தவ மக்களின் மேய்ப்பரான திருத்தந்தை பிரான்சிஸ்அவர்கள் பாப்பாண்டவர்களுக்கான நெறிமுறைகளை மீறி, சமாதானத்துக்காகத் தமது உயர்வு நிலையை விட்டுக் கீழிறங்கி மன்றாடியமை பற்றிய விடயமே ?மேற்குலக ஊடகங்களில் இப்போது அதிகம் பேசப்படுகின்றது.

சூடானிலிருந்து ஒருவாறு விடுதலை பெற்ற தென்சூடானில், அங்குள்ள இருகுழுமங்களின் மோதல்கள், முரண்பாடுகளால் சமாதானம் சீரழிந்து குழம்பிப் போய் நிற்கின்றது.

இந்தத் தரப்புகளை இரண்டு நாள் ஞானவழிபாட்டுக்காக ரோமுக்கு அழைத்த திருத்தந்தை பிரான்ஸிஸ், திடீரென செய்த காரியம் தான் உலகையே அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தியுள்ளது.

உலக மக்களுக்காகப் பாடுகளைச் சுமந்த இறைமகன் இயேசுவின் வழியில் வந்தவர் அல்லவா திருத்தந்தை, அந்தப் பாதையில் முன் மாதிரியாக நடந்து காட்டியுள்ளார்.

தமது 82வது வயதில் தள்ளாத உடல் நிலைக்கு மத்தியிலும் –தென்சூடானில் முரண்பட்டு நிற்கும் தலைவர்களின் காலில் விழுந்து வணங்கி, அவர்களின் பாதங்களில் முத்தமிட்டு சமாதானத்தைப் பற்றி நில்லுங்கள் என்று மன்றாடினார் திருத்தந்தை.

முதலில் தென்சூடானின் அதிபர் சல்வார் கிர்மயார்டிட் காலில் தன் கோரிக்கையை முன் வைத்தார் திருத்தந்தை. தொடர்ந்து உபஜனாதிபதியாக நியமிக்கப்படவிருக்கும் றிக் மச்சார் மற்றும் றிபக்கா நயன்டெங் ஆகியோரின் பாதம் பற்றினார் பாப்பரசர்.

இவர்களில் அதிபர் கிர்ரும், உபஜனாதிபதி யாகும் மச்சாரும் பரமவைரிகள் போல செயற்பட்டு வருகின்றனர். அதனால் மோதல் நிலை நீடிக்கும் ஆபத்துத் தென்படுகிறது.

2013இல் தன்னைப் பதவி கவிழ்க்கும் சதிப் புரட்சி முயற்சியில் ஈடுபட்டவர் மச்சார் எனத் தெரிவித்து, அவர் மீது குற்றம் சுமத்தி வருகிறார் அதிபர் கிர்.

எனினும் நீண்ட இழுபறி, சச்சரவுகள், இனம், குழும மோதல்கள், பேரழிவுகளுக்குப் பின்னர் கடந்த ஆண்டு எதியோப்பியாவில் சமாதான உடன்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புகள் ஒப்பமிட்டு இணக்கத்துக்கு வந்தன.

அந்த இணக்கம் முறியும் ஆபத்து நிலையிலேயே சம்பந்தப்பட்ட தலைவர்களை தமது ரோமாபுரிக்கு அழைத்து, ஞானவழிபாட்டில் ஈடுபட வைத்து, அவர்களுடன் கலந்துரையாடி, அவற்றிற்கு மத்தியில் அந்தத் தலைவர்களின் கால்களில் விழுந்து, சமாதானத்தைப் பற்றி நில்லுங்கள் என் மன்றாட்டமாய்க் கேட்டிருக்கின்றார் திருத்தந்தை.

திருத்தந்தையின் இந்த தாராளப் பெருமித நடவடிக்கை, உலக சமாதானத்துக்காகத் தன்னையே ஒறுக்கும் மேன்மைப் பண்பு, இன்று உலக ஊடகங்களில் அதிகம் பேசப் படுகின்றது.

திருத்தந்தையின் இச்செயல் உலகுக்கு முன்மாதிரியாயினும் , அதற்கு முன்னரும் இத்தகைய மேன்மைப் பண்புக்கு ஈழத்தின் திரு அவையில் ஓர் உண்மைச்சம்பவம் முன்னுதாரணமாக உள்ளது என்பதைப் பகிரங்கப்படுத்த விரும்புகிறோம்.

உலகக் கிறிஸ்தவர்கள் திருத்தந்தையைப் போற்றுவது போல, ஈழத்தமிழ் கிறிஸ்தவர்களால் அதிகம் மதிக்கப்பட்டு வருபவர் மன்னார் ஆயராக இருந்து ஓய்வு பெற்ற வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசேப்பு அவர்கள்.

அவர் மன்னார் ஆயராக இருந்த ஓய்வு பெற்ற வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசேப்பு அவர்கள்.

அவர் மன்னார் ஆயராக இருந்த காலத்தில் மிலேனியத்தின் முதல் தசாப்தத்தின் பிற்பாதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

திடீரென மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட படையினரின் இராணுவ நடவடிக்கை விரிவாக்கப்பட்டது. படைநகர்வு மடுத்திருப்பதிப் பக்கத்தை நோக்கியதாக அமைந்தது. அந்தக் கால கட்டத்தில் தான் மடுத் திருப்பதியும் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது.

திருப்பதியைக் காப்பாற்றும் எண்ணத்தில் இராணுவத் தரப்புடன் தொடர்பு கொண்டார் ஆயர் வண.இராயப்பு ஜோசேப்பு.

மடுத்திருப்பதிப் பிரதேசத்திற்குள் இராணுவ நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வேண்டாம் என்று வினயமாக வேண்டினார் அவர்.

அச்சமயம் மடுத்திருப்பதிப் பிரதேசம் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் நிலை கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்யுங்கள், இராணுவம் அங்கு படைநடவடிக்கைகளை மேற்கொள்ளாது என்றது இராணுவத் தரப்பு.

அதையடுத்து விடுதலைப்புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலனை அழைத்துப் பேசினார் மன்னார் ஆயர்.

மடுத்திருப்பதியைக் காப்பதற்காக அதனை இராணுவசூனிய வலயமாக்குங்கள், அதிலிருந்து விலகி நில்லுங்கள் என்று கோரிய ஆயர் வண.இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை தமது கோரிக்கையை வலியுறுத்தித் திடீரென கரிகாலனின் பாதம் பற்றி மன்றாட்டமாய்க் கோரினார்.

அதைக் கண்டு கண்ணீர் மல்கினார் கரிகாலன். உடனடியாக விடுதலைப்புலிகளின் சகல படைத்துறைகளும் மடுத்திருப்பதிச் சுற்றாடலிலிருந்து விலக்கப்பட்டன. ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் எழுதப்படாத சில பக்கங்களில் இதுவும் ஒன்று.

அந்த உண்மையை வெளிக்கொணர்வதற்கு இதுவே பொருத்தமான சந்தர்ப்பம். திருத்தந்தைக்கு முன்மாதிரியாக நடந்தவர் நமது மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப்பு அவர்கள்.

தமிழர் தம் புதுவருடப் பிறப்பு நாளில் இத்தகைய பெருந்தகைகள் குறித்து நாம் சிந்தித்து, நம்மையும் அவ்வழியில் நெறிப்படுத்திக் கொள்வதை புதுவருடப் பிரதிக்ஞையாகக் கொள்வோம். திருத்தந்தை, மன்னார் முன்னாள் ஆயர் ஆகியோர் வழியில் நாமும் சமாதானத்துக்காக, அமைதிக்காக மன்றாடுவோம்.

-நன்றி- காலைக்கதிர் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து





# சிறந்த தலைமைக்கு எடுத்துக்காட்டு

தர்மலிங்கம் சித்தார்த்தன், பா.உ

எமது நாட்டில் நடந்த மதவெறி பயங்கரவாதத்தின் உச்ச அழிவு உயிர்ப்பு நாளில் பக்தர்கள் மீது மேற்கொண்ட தற்கொலை மிலேச்சத்தனமான தாக்குதல் நிகழ்வினை மிகவும் பொறுப்புடனும், பெருந்தன்மையுடனும் இலங்கை கத்தோலிக்க பக்தர்களின் வழிகாட்டியுமான கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமை வழிகாட்டலை சமயம் கடந்து தலைவர்கள் முதல் சாமானியர் வரை வியந்து பாராட்டினர்.

பகைவனை இனம் காணுங்கள், அதற்காக அவனின் இனத்தையோ, மதத்தையோ எதிர்த்து கண்டிக்காது, தண்டிக்காது மன்னிப்பால் மனிதமாண்பை வெளிப்படுத்தி இறைபற்றில் நம்பிக்கை வைத்து இறந்தவர் ஆத்மசாந்திக்காகவும், காயப்பட்டவர்கள் உறவினர்களின் துயரில் பங்கேற்று ஆறுதல்படுத்துங்கள் என மீண்டுமோர் இனமதக்கலவரம் ஏற்படாது உதவும் கரங்களாக இறைவனை இரந்து வேண்டுங்கள் என்ற வழிகாட்டலே பெரும் அமைதிக்கு வித்திட்டது.

இது பற்றி நாடாளுமன்றில் மிக உருக்கமாக உரையினை வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறுகையில் இதே வழிகாட்டலை 1983ம்ஆண்டில் அரசும், பாதுகாப்புத் தரப்பினரும் மேற் கொண்டிருந்தால் இனக்கலவரமோ, அழிவுகளோ நடந்தேறியிருக்காது என்றார். இவை ஓர் படிப்பினையாக பாதுகாப்புப் படையினரின் அலட்சியப் போக்கால் முன்னறிவித்தலை ஏற்காது பதவிப் போட்டிகளிலும் , படாடோப நிகழ்வுகளாலும் புலிகள் என கிலி கொள்ள வெத்து தண்டிப்புக்கு தமிழர்கள் எப்பவும் போடுதடிகளாக பயன்படுத்தி வந்த வரலாறு மாற்றப்பட்டது.

இன்றை வழிப்பு வரலாறு பாதுகாப்புகள் சற்றுமுன் காலத்தில் உசாராக இருக்க முடியாதது வெறும் துப்பு துலக்குபவர்கள் பாதுகாப்புப்படையினர் மட்டுமல்ல, அரசியல் தலைமைகளும் அரச உத்தியோகத்தர்களும், சமயத் தலைமைகளும் அயலில் நடாத்தி வந்த பயிற்சி முகாம்களையும், ஆட்சேர்ப்புக்களையும், கைலஞ்சங்களாலும், அரசியல் பதவிப் போட்டிகளாலும் அலட்சியமானதை சுயமாக்கிவிட்டு குற்றத்திற்கு உடந்தையானவர்கள் யார் என்பதை வெளிப்படுத்த முடியும். மழைவிட்டும் தூவானம் போகவில்லையா?

சிறியவீடு அமைப்பதற்கு எத்தனை அனுமதி பெறவேண்டும் யார்யார் விதிவிட வசதிகளும் வாகனப் பயன்பாடுகளும் வளர்ச்சிக்காக கையூட்டலால் மறைக்கப் பட்டதால் உடந்தையானவர்கள் உழைத்துக் கொண்டவர்களில் எவரும் வலையில் சிக்கவில்லை என்பது தான் வேடிக்கையானது.

இவற்றுக்கு மத்தியில் அமைதியான இடங்களில் நடைபெற்ற மாணவர்கள் கைது பாடசாலை,பல்கலைக்கழக முடக்கம் இளையோர் மட்டில் என்ன சிந்தனைகளை விதைக்கும் என்பதனை உணராதவர்கள் பாதுகாப்புக்கு பலம் சேர்ப்பவர்கள்.

எதிலும் கண்காணித்து உடன் பிடிபட்டவைகளை விட மீண்டும் தூபம் போடும் நீர்கொழும்பு, சிலாப சம்பவங்களை தூண்டியவர்கள் யார்? இதனைக் கண்காணித்துப் பாதுகாப்புத் தரப்பினர் முன் நடந்தால் இவைகளே பின் விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பதனை விழிப்புடன் ஏனைய பகுதிகளுக்கும் பரவாமல் பாதுகாக்க வேண்டியது சமய, சமூகப் பொறுப்புமிக்கோர் பணியாக வேண்டும்.

# ஞாயிறு வெள்ளியானது

அல்லாவின் பெயரால் அவர்கள்
அறியாமல் செய்கின்றார்கள்
இவர்களை மன்னியும் உயிர்த்த யேசுவே

பிரபஞ்சத்து உயிர்கள் யாவும்
மரம், செடி, கொடிகள்,
விலங்குகள், பறவைகள் கூட
துன்புறுத்தப்படல் கூடாது

அடுத்தவனைக் கத்தியினால்
கடும் ஆயுதங்களால் மட்டுமல்ல
உன் வார்த்தைகளினாலும்
புண்படுத்துதல் கூடாது
இப்படித்தான் யேசு வழியில்
கர்தினால்களும் கற்றுத் தருகின்றார்கள்

கடந்த 30 வருடங்கள்
புத்தரின் போதனைகள்
மறுதலிக்கப் பட்டதால் தான்
கண்ணுக்குத் தெரியாத யுத்தங்கள்
தொடர் சுமையானது

நாற்பது நாட்கள் கல்வாரிப்
பாடங்களுடன் தவமிருந்து
உயிர்த்த ஞாயிறில்
அல்லாவின் பெயரைச் சொல்லி
தமிழ் கிறிஸ்தவர் மத்தியில்
உமிழ்ந்தது ரத்தக் களரி
புத்த பகவானும் காக்க மறந்தார்
ஞாயிறு மீண்டும் வெள்ளியானது
உயிர்த்த யேசுவின் உடம்பு முழுவதும்
மனித ரத்தங்கள் அப்பிக் கிடந்தது.
கண்ணீர் சிந்திய தாயவள் துண்டுகளாய்
சிதறிப் போக நூற்றுக் கணக்கான அப்பாவி மக்கள்
கொச்சிக்கடை அந்தோனியாருடன் வேத
சாட்சிகளானார்கள். மட்டக்களப்பு சீயோன் சீடர்கள்
சிதறினர் கதறினர். சிரித்துக் கொண்டு வந்த
தீவிரவாதிகளால் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தது.
மனிதக் குண்டுகளல்ல.
மிருகத்தனமான குண்டுகள்
நீர்கொழும்பு கண்ணீரில் மூழ்கிப் போனது
சுற்றிப் பார்க்க வந்தவர்களும் சொர்க்கம் போயினர்முழு
இலங்கையும் அதிர்ந்தது.
உள்நாட்டு உத்தமர்கள் உறங்கிப் போயினர்
நேற்று நாட்டவரின் வெறியாட்டம்
எம்மவரைக் கொண்டு எம்மையழிக்கும்
வேற்று நாட்டவரின் வெறியாட்டம்

எலிகளை கைது செய்யப் போய்
பூனைகளை சிறைப்பிடிக்கிறார்கள்
புலிச்சாயம் பூசுவதற்கு
பலியாக்கப்பட்டது அப்பாவிகளின் ரத்தம்

யார் திட்டமோ இது
வேர் விட்ட பகை தொடர்கிறது
காவலும் லேண்டாம்
கைதுகளும் வேண்டாம்
சிவசேனையும், மரியாஞ் சேனையும்,
பொதுபலசேனாவும் மோதிக் கொள்ளவும்
இடம் வேண்டாம்
எல்லாவற்றையும் இயக்குபவர்கள்
உள்நாட்டில் இல்லை
உலக நாடுகளில்.....

- தமிழ் நிலா -

# இங்கே கொலைகள் விற்கப்படும்

பந்து விளையாடிய
பிஞ்சுகள் நடுவே
வெடிகுண்டுகளால்
விளையாடினானே வெறியன்

சிலுவைப்பலி முடிந்ததென
சிரித்திருந்த மழலைகள் தோளில்
சிலுவையை ஏற்றினானே
கொடூரன்

பளிச்சிடும் சிரிப்பு கொடுத்த
பாலகரைக் கண்டபோதேனும்
வெடிக்கக் கொணர்ந்த
வெடிகுண்டை
விலக்க மனம் வரவில்லை
அவனுக்கு

யுத்தப் பசிக்கு இரையானோர்
ஓய்வெடுக்கும் போதினிலே
இரத்தப் பசிக்கு இரையாகும்
நிலையல்லவா?

கொலைகள் விலைகள் பேசி
விற்கப்படுவதென்ன?
முயல்களின் நடமாட்டங்களை
முற்றும் அவதானித்தவர்கள்
முதலைகளை அனுமதித்ததென்ன?

ஆடுகளால் அச்சுறுத்தல் என
அனுதினம் பேசியவர்கள்
காண்டா மிருகங்களைக்
கணக்கெடுக்காததென்ன?

பத்தாண்டு முன்னே
இந்தப் பாவப்பட்ட பூமியிலே
செத்துத் தொலைத்த கதை
பத்தாண்டு பினனே நமது
படியருகில் நடப்பதென்ன?

பயங்கரவாதி வந்தாலும்
பாய் போட்டு இருக்க வைத்து
பாசமூட்டும் திருச்சபையை
பலவீனமாய் நினைத்ததென்ன?

ஆயுதம் தூக்கிடாது
அன்பையே தூக்குகின்ற
அடியவர்களைக்
கொன்றொழித்த அரக்கனைப்
பெற்றதாரோ?
அவனுக்குப் பாலூட்டிய முலைகள்
சபிக்கப்பட்டவை

எதிரிகள் நடுவே
ஏதுமறியாக் குழந்தை இருந்தால்
எதிரி இலக்கையும் தாக்கா
இரக்கமுள்ளோர் வாழ்ந்த மண்ணில்
சாத்தானின் புதல்வன் வந்து
சவால் விடுப்பதென்ன?

தேகத்தைச் சிதைத்தாலும்
அவர்கள் ஆன்மாக்கள் நிலைத்திருக்கும்
தேகங்களை சிதைத்தவன் ஆன்மா
நரகத்திலே குடியிருக்கும்

**யோ.புரட்சி (இரத்தம் தோய்ந்த மண்ணிலிருந்து)**

# ஏனிந்தக் கொலை வெறி?

உலகம் என்பது மனிதர்கட்கே!
உலகினில் மேலவர் மானிடரே!
கலகம் செய்திட மனிதர்கள்
காட்டினில் வாழும் விலங்குகளா?
நிலவை வானைச் சூரியனை
நினைப்பவர் மானிடர் மாத்திரமே!
பலவும் அறிந்துள்ள மானிடரே!
பகைக்கிறார் சகோதர மனிதர்களை!

உயிர்கள் யாவும் ஒன்றே
மதங்கள் அதனைப் பிரிப்பதா?
துயர்கள் அடையச் செய்து
மகிழ்ச்சிக் கடலினில் மிதப்பதா?
அயலவனை மதிப்பதே அன்பு
அழிப்பது மதத்தின் தர்மமா?
அபயம் அளிக்கும் ஆலயங்கள்
புனிதமாய் மதித்திடப் படுமா?

மானிடம் வாழ்ந்திட வேண்டும்
மனிதம் தளைத்திட வேண்டும்
வீணிடர் தீர்ந்திட வேண்டும்
விரக்திகள் அகன்றிட வேண்டும்
போரிடர் தணிந்துள்ள வேளை
வேறிடர் புகுந்தது வாழ்வினில்
புனித நாளாம் ஆலயத்தில்
ஏனிந்தக் கொலைவெறித் தாக்குதல்கள்?

**- அபிராஜன் அன்ரனிபீற்றர்-**



# இறைமை இழந்த மக்களுக்கு இறைவன் ஒரு வாய்ப்பளித்தான்

"கட்டியெழுப்புங்கள் உங்கள் கனவின் கனவுகளை"
என உத்தரவிட்டு அகலவிரித்தார் பரிதாபம்!!!
புல்லர்களும் கள்ளர்களும் புதுபுதிதாய் தோன்றினர்
புரட்சி மூட்டையை சுமத்தினர் மக்களில்
அவலப்பட்ட மக்களின் கண்ணீரை விற்றுக்
காசாக்கினர்
மக்களின் சிற்சிறு வேள்வியிலும் சிரம்
நீட்டி நல்ல வேள்வியையும் கள்ள
வேள்வியாக்கும் காரியம் செய்தனர்
தலைவராகும் கனவில்
மிதந்ததால் தலைவராகவே காரியம் பார்த்தனர்
மக்களின் சேவகராய் உழைக்க யாருக்குமே
மனசு வரவில்லை
தறிகெட்ட தலைமைகளின் தரித்திர
குணம் கண்டு கொடுத்த வாய்ப்பை மீண்டும்
பறித்தட்டார் கடவுள் – மீண்டும்
ரத்த வெடில் மணம் நினைவுகளைச் சுட்டது
வரமிழந்த போது தான் மக்களும்
வரம்பிடாத துயர் அறிந்தனர்

கட்டியெழுப்பக் கடவுள் தந்த காலத்தில்
கத்திக் கத்தித் தொண்டை கிழித்த
சூத்திரரின் சூட்சுமத்தை உணர்ந்தனர்
இறைவன் தந்த காலத்தையும்
சுடுகாடாக்கிய வேடதாரிகளிடம்
ஏதுமில்லை அதிகாரம்
என்ற உண்மை அறிந்தனர்
இப்போது இருந்த அமைதியையும்
அடியோடு இழந்த மக்களாய்
ஆசீர்வதிக்கப்பட்ட தேசத்து மக்கள்
அடிமை மக்களாய் கண்ணீருடன்

**- வன்னிமகள், எஸ்.கே.சஞ்சினா -**

# பாரம்

"வருத்தங்கள் பட்டுப் பாரம் சுமப்பவரே
அருகிலே வாருங்கள் அயர்வகற்றி உமை வருடி
விருந்து தருவேன் யான் விரைந்து"
என என்றோ இருந்து அழைத்தது ஒரு அசரீரி "ஈஸ்டர் அன்று"
புரிந்து.... அதனின் பொருளறியார்....
புனிதம் ........... அதன் கொள்கைக்காய்........
மரித்தல் எனச் சொல்வோர் ..........
மனிதநேயம் மறந்து
"வருத்தப்பட்டு குண்டுப் பாரம் சுமந்து வந்து"
திறந்திருந்த பாவமன்னிப்புக் கூடு விட்டுஷ
திருச்சபையுள் நுழைந்து சிதறி வெடித்தூரை
நொருக்கினார் சொர்க்கத்தை நொடியில்
குதறி நரகமாக்க சிலரின் மதம் நக்கிற்று
குருதியாற்றை
வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவரே அருகிலே வாருங்கள்
என்ற அசரீரி பொறிகலங்கித் திகைத்து புலனழிந்து
வாயடைத்துக் குருதி வடிந்தோடக் குற்றுயிராய் துடிக்கிதின்று

- த.ஜெயசீலன் -

# மரிப்பும், உயிர்ப்பும்

மதத்துவேசம் என்ற மாபெரிய சிலுவையில்
தற்கொலைக் குண்டு வெடிப்புச் சிதறல்
எனும் ஆணிகளால் அறையுண்டு இயேசு
மீண்டும் ஆவி துறந்து
இவ்வுலகே அதிர்ந்து இருள வைத்தார் ....
முன்பொருநாள்
உயிர்த்து அதே உலகுக்கு
உயிர் கொடுத்த ஞாயிற்றில்

என்று மீண்டுயிர்த்து இருண்ட
நிலம் ஒளிரப் புன்னகைப்பார்
குண்டுப் பொதி சுமக்கா மத இணக்கம்
மின்னுகின்ற பொன்னுலகில்?
விழிழத்தெழுந்த மனிதர் நெஞ்சில்?





ஜெசாக் நிறுவனத்தில் ...



யாழ்மாநகரசபை முன்றலில் ...



தந்தை செல்வா தூபி முன்றலில் ...



கியூடெக்கரித்தாஸ் மண்டபத்தில் ...



மாவட்டச் செயலகத்தில் ...



யாழ்பிரதேசசபையில் ...



யாழ், மஸ்ஜித் முஹம்மதியாவில் ...



இலங்கைப் பல்சமயக்கருத்தாடல் நிலையத்தில் ...

**சகோதரர்கள் துயரில் நாமும்**
**இணைகின்றோம்**
**உங்களோடு நாம் என்றும்**
**இருக்கின்றோம்**




இப்பத்திரிக்கை யாழ்களரி நிறுவனத்தால் காந்தள் புலம்பெயர் இளையோர் அனுசரணையில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்துபிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.05.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது